தமிழ் வாழ்க.

தமிழ்ப் பொழில்

துணர் ௪௧.

விசுவாவசு

1965—66.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :
ச. சுயம்பிரகாசம், பி. ஏ., பி. எல்.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம். பி. ஏ., பி. எல்., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம், பொழிற்றொண்ட

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மது

4. திரு. வித்துவான். க. வெள்ளைவாரணனர்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழக

5. திரு. கு. சிவமணி எம். ஏ., பி. டி., முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்

6. திரு. வித்துவான். த. அடிகளாசிரியர், பேராசிரியர், ,,

7. திரு. வித்துவான். ச. பாலசுந்தரம், பேராசிரியர், ,,

8. திரு. வித்துவான். சி. கோவிந்தராசன், பேராசிரியர், ,,

உள்ளுறை,

விசுவாவசு. துணர் சக. மலர் க—யிஉ

1965—1966 பக்கம்

1 கலையும் பண்பாடும்
புலவர் தி. நா. அறிவு ஒளி. 1

2 நீண்டகாலம் உயிர் வாழ...?
டாக்டர் ஆ. சண்முகவேலன் எம். ஏ., பி. ஓ. எல், 4

3 வாழ்வாய்!
த. பழமலை. அண்ணாமலை நகர் 8

4 கொடையின்பம்
புலவர். ந. செகதீசன். 9

5 தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரத்தின் இடம்
சாலை இளந்திரையன். 18

6 இரண்டு பரம்பரைகள்
சாலை இளந்திரையன். 20

7 குறள் மரபு
புலவர். தி நா. அறிவு ஒளி 23, 59

8 வேள் எவ்வி" (நாடகம்)
புலவர் ச. பாலசுந்தரம். 25, 54

9 பொழிற்றொண்டர் பேசுகின்றார் 33, 34, 129, 225, 291, 323

10 சேரன் செங்குட்டுவன்
புலவர் ச. பாலசுந்தரம். 35

11 துறவி
கு. சிவமணி. 41

12 தமிழனே தலைமகன்
சாலை இளந்திரையன் 54

13 பண்டைத் தமிழரின் கட்டிடக் கலை
T. V. சண்முகம், பி. ஏ., 64

14 புகார் முதல் வஞ்சி வரை
வித்துவான் சி. கோவிந்தராசனார். 69, 171

15 இலக்கண தீபம்
வே. நடராசன். 81

16 வள்ளுவத்தில் ஆராய்ச்சிப் பொழிவுகள்
சாலை. இளந்திரையன். 89

17 கையறு நிலை
புலவர். ச. பாலசுந்தரம். 92

பக்கம்

18 ஞாயிறுமாட்சி
தி. வேங்கடராமன், பி. ஏ., பி. டி., 93

19 அறத்தின் தீர்ப்பு
புலவர். தி. நா. அறிவு ஒளி. 97

20 வஞ்சினம் வாய்த்த வேந்தன்
K. S. மகாதேவன் M. A., B. Sc., 100

21 புலவர் மாலை
சித்தாந்தச் செல்வர். அ. தா. ப. திருஞானசம்பந்தன். 109

22 மணமும் இனமும்
புலவர். கு. கணபதி. 111

23 ஒளி
சித்தாந்தச் செல்வர். அ. தா. ப. திருஞானசம்பந்தன். 113

24 தமிழுள்ளம்
ஈரோடு. ஆற்றலரசு. 120

25 கொல்லிப்பாவை
புலவர், தே. ப, சின்னசாமி, 121

26 பசிப்பிணி
கோ. கோவிந்தசாமி, திருமுக்கூடல். 124

27 சிலப்பதிகாரம் காவியமா ?
சாலை இளந்திரையன். 127

28 சங்க அரங்கம் 134

29 அளபெடை
வீ. இராசமாணிக்கம், எம். ஏ.. 137

30 சுந்தரக் கலையோவியம்
இர. குழந்தைவேலு எம். ஏ., 150

31 தமிழ்நூற்குறியீட்டு விளக்கம்.
வித்துவான் ச. பாலசுந்தரம். 159

32 சைவ சமய உண்மைகளும் தமிழ் நூல்களும்
வித்துவான். திரு. அடிகளாசிரியர் 180

33 நிலவு தந்த நினைவு.
கு. சிவமணி, எம். ஏ., பி. டி., 193

34 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று
வித்துவான். போ. இசரயேல் எம். ஏ., டிப் (செர்மன்) 204

35 கண்ணகி
புலவர். ந. செகதீசன். 217

36 பாடல் பெற்ற பரிசு
கு. சிவமணி, எம். ஏ., பி. டி., 229

பக்கம்

37 மலர் — புலவர். ந. செகதீசன் 247

38 திருக்கடல்மல்லை
தி. நா. அறிவுஒளி. 249

39 காலக் கணக்கு
தி. வேங்கடராமன், பி. ஏ., பி. டி., 255

40 திருமங்கையாழ்வார் காட்டும் இயற்கைக் காட்சிகள்
மு. வெள்ளைச்சாமி 259

41. இயற்கை
ப. தமிழ்மணி. 264

42. கற்பின் குழவி மனோன்மணி
இரா. குழந்தைவேலு. எம். ஏ., 269

43. வெண்பாவின் ஓசையும் தளையும்
த. மு. கோவிந்தராய நாட்டார் பி. ஏ., பி. எல் 275

44 மக்கட்பேறு
அ. தா. ப. திருஞானசம்பந்தன். 278

45 வரலாறும் செவிவழிச் செய்தியும்-வானகோவரையன்
வித்துவான். திரு. அடிகளாசிரியர். 284

46 மறைமலை அடிகள் வரலாறு (மதிப்புரை)
திரு. அடிகளாசிரியர் 287

47 புறு பறந்தது
பொழிற்றொண்டர். 289

48 வான் வழங்கிய வாழ்வு
கு. சிவமணி 295, 345

49 குணமும் குற்றமும்
புலவர், கு. கணபதி 299

50 முன்னிலைப் பன்மைப் பெயர்
வித்துவான், திரு. அடிகளாசிரியர் 302

51 கம்பன் காட்டும் பெண்மை
வித்துவான், மு. பவானி 305

52 இலக்கியத்தில் அறங்கள்
மு. மணிமேகலை 308

53 மொழிநூல் முதல்வர்
புலவர். தி. நா. அறிவுஒளி 316, 331

—

தமிழ் வாழ்க.

துணர் சக. மலர் க.

தமிழ்ப் பொழில்

விசுவாவசு — சித்திரை

1965

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம். B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம், பொழிற்றொண்டர்.

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. சித்தாந்த கலாநிதி ஒளவை சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

4. திரு. வித்துவான் க. வெள்ளைவாரணனர்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

5. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை.

துணர் சக. மலர் க.

		பக்கம்
1.	கலையும் பண்பாடும்	
	புலவர், தி. நா. அறிவுஒளி	1
2.	நீண்டகாலம் உயிர்வாழ...?	
	டாக்டர், ஆ. சண்முகவேலன் எம். ஏ., பி. ஓ. எல்.,	4
3.	வாழ்வாய்!	
	த. பழமலை I. M. A., அண்ணாமலைநகர்	8
4.	கொடையின்பம்	
	புலவர், ந. செகதீசன்	9
5	தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரத்தின் இடம்	
	சாலை இளந்திரையன்	18
6.	இரண்டு பரம்பரைகள்	
	சாலை இளந்திரையன்	20
7.	குறள் மரபு	
	புலவர், தி. நா. அறிவுஒளி	23
8.	"வேள் எவ்வி" (நாடகம்)	
	புலவர், ச. பாலசுந்தரம்	25

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௬	மலர்
௪௧	விசுவாவசு, சித்திரை 1965 மார்ச், ஏப்ரல்.	௧.

கலையும் பண்பாடும்

புலவர். அறிவுஒளி.

அழகுக் குவமை சொல்லப் பிறந்த அழகி யொருத்தி, தன்னுணர்ச்சி நலனும், மெய்ப்பாடும் புலப்பட உள்ளங்கவரும் கலைநயங் கமழ ஆடும் ஆடலைக்கண்டு, வாய்பேசா சிலையாகி உணர்வொன்றி, மெய்ம்மறந்து சுவைத்துத் தனிப் பேரின்பந் துய்க்கிறோம் அன்றோ? ஆம். அந்த நிலையில் நம் வாழ்க்கை, வாழ்வுப் போராட்டங்கள், நம் தன்மை – தீமைகள், நம் அறிவு – அறியாமைகள், பெருமை— சிறுமைகள், செல்வம் – செல்வாக்கு, ஏன்? நம்மையேகூட மறந்து 'தவநிலை' யில் இருக்கிறோம் அல்லவா? ஆம்.

தன்னை மறந்த நிலையில் இருக்கிறோம்.

இதுதான் கலையின் பயன். தன்னை மறக்கச் செய்வது கலை.

தாங்கருந் துன்பந் துளைக்கிறது. நமக்கே நம் நிலை புரியவில்லை. அப்போது அமைதியாகத் தனிமையை நாடிச்சென்று நம் இடுக்கண்களுக்குக் காரணத்தை ஆராய்கிறோம். உண்மை புலப்படுகிறது. செம்மையாக நம் நிலையைச் சீர்திருத்திக் கொள்கிறோம். இந்நிலையே தன்னை உணர்வது.

தன்னை உணரச் செய்வது பண்பாடு.

மக்கள் வாழ்க்கையில் முதலிலிருந்து முடிவுவரை, தன்னை மறத்தல் என்ற அடைவு நிலையும், தன்னையுணர்தல் என்ற அடைவு நிலையும் அமைந்தேவரக் காண்கின்றோம. ஆனால் பெரும்பாலோர் உண்மையான தன்னை மறக்கும் நிலையையும் உண்மையாகத் தன்னை உணரும் நிலையையும் அறிவதில்லை; போலிகளில மனந் தடுமாறி வீழ்கின்றனர்.

பண்டைத் தமிழர் முத்தமிழ் முறையமைப்பில் தன்னை மறத்தலையும், தன்னையுணர்தலையும் இணைத்து மொழி வாழ்விலும், மக்கள் வாழ்விலும் கலையும் பண்பாடும் தலையோங்கி நிலைபெறச்செய்த நுண்மாண் நுழைபுலம் எண்ணுதற் குரியது. இயல்துறை தன்னையுணரச்

செய்யும் துறை, இசையும் கூத்தும் தன்னைமறந் தின்புறச்செய்யும் துறை. இசை: கூத்துக்களில் ஓரளவு தன்னையுணரச் செய்யும் பகுதி இடம்பெறுதலும் உண்டு.

வாழ்வில் மக்கள் இன்பம் அமைதி (ஆறுதல்)யைத் தேடியலைகின்றனர். வாழ்க்கை நோக்கமே இன்பமடைதலும், ஆறுதல் பெறுதலுமே ஆறுதல், இன்பம், அமைதியைக் கலையும் பண்பாடும் அளிக்கின்றன

நம்நிலை மறக்கச் செய்வது அழகும் இன்பமும்
நம்நிலை யுணரச் செய்வது அறிவும் துன்பமும்

கலையில் பண்பாட்டையும், பண்பாட்டில்கலையையும் ஒன்றியைந் திணைந்து விளங்கச்செய்த மாண்பே தமிழர் அறிவாற்றலில் மிகப் பெருந்தொண்டாகும். கோவில்களைக் கலைக் கோட்டங்களாக ஆக்கியமை இவண் உணரத்தக்கது நாட்டுப் பொதுநிகழ்ச்சிகள், திருவிழாக்களில் கலை—இலக்கியங்களுக்கு முதன்மை தந்த நாகரிகம் எண்ணத்தக்கது

தன்னையே மறந்து நிலைகுலைவதுந் தீது; தன்னையுணர்ந்து உணர்ந்து தன்னல வாய்ப்பட்டு அழிவதும் தீது, என உணர்ந்தே பண்பாட்டையும கலையையும் ஒரே அளவில இணைத்தமைத்தனர் சான்றோர்.

பண்டை மன்னர் அவைக்களத்தில் புலவர் சான்றோர்க்கிருந்த மதிப்பு—இடம்—கலைஞர்களுக்கும் இருந்தது. மக்கள் மன்பதையில் கூட இதே பொதுநிலை இருந்தமை ஆய்ந்தறிதற் குரித்து.

பண்பாட்டால் கட்டிக்காக்கப்படாத கலையும், கலையால் தழுவியிணைத்துச் செல்லப்படாத பண்பாடும் பயனற்றுவிடும்.

இந்தத் தமிழ் அறப் பண்பைச் சங்க இலக்கியச் செல்வங்கள் மிக அருமையாக உணர்த்துகின்றன. பண்பாட்டின் உயிரான பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாட்டின் தொண்டினையாரே விளக்கவல்லார்?

நற்றிணை 210-ஆம் பாடலில் மிளைகிழான் நல்வேட்டனார் என்ற சான்றோர் கலை தழுவிய பண்பாட்டை மிக அழகாக இலக்கிய நயமும் புலமை மாண்பும் பொதுள யாத்தளித்துள்ளார்.

'இவ்வுலகினர் வீறுபேசுதல், அதிகாரம் செலுத்துதல், ஆணையிடுதல் தம்மைப் பற்றி நெடிதுபேசுதலையும், மிக விரைந்து ஊர்திகளில் செல்வதையும் செல்வ வாழ்க்கை என எண்ணுகின்றனர். இது தவறான கருத்து. செல்வ வாழ்க்கையாக இவற்றை ஓராற்றான் கொண்டாலும் இந்நிலை அவரவர் உழைப்பின்-முற்சியின்-அளவுக்கேற்ப அமைந்ததேயாம். இந் நிலைக்குயர யார் முயன்றாலும் எளிதில் கைகூடும். ஆனால், சான்றோர்கள் எதை உண்மையான செல்வ

25 OCT 1965

மென்று ஆராய்ந்து தெளிந்திருக்கின்றனர்? நாம் பழகுகின்றவர்களின்—நமமோடு சேர்ந்தவர்களின் துன்பத்தைப்போக்கியும், அவர்களைக் காத்தும வன்கண்மை ஒரு சிறிதுமின்றி, மென்மைத் தன்மையோடு இனிய அருளாளராய்த் திகழ்வதே உண்மையான செல்வம் என்று தமிழ்ச் சான்றோர் கொள்வர்'—இந்தக் கருத்தை ஓர் அழகிய காதலோவியப்பாட்டில் பொன்னரிமாலையிடைப் புதுமணியெனவைத்திழைத்துள்ளார் மிளைகிழான் நல்வேட்டனார் :

"அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயருமு யாணர் ஊர!
நெடிய மொழிதலுங் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று; தன் செய்வினைப் பயனே
சான்றோர் செலவம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பணபின்
மென்கண் செலவஞ் செலவமென்பதுவே." (நற்: 210

பொருளீட்டுவதை. முயற்சி செய்வதை. வாழ்க்கையின் வளமையையும், வாய்ப்புக்களையும் பெருக்கிக்கொள்வதைத் தமிழறிஞர் குறைகூறவில்லை. ஆயின். அதற்கு அடிமையாகி இழிவதையே அவர்கள வெறுத்தனர். அதனால்தான் இத்தகைய உண்மைகளை அறிவுறுத்தினர்.

செல்வ வாழ்விலும் அருள் வாழ்வை அறிவுறுத்தும் பண்பாடு நம் தமிழிலக்கியத்தின் அன்புக்கொடையாகும். 'பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சமொடு காமர் பொருள்' திரட்டுவதை உடன்பட்டவர்கள், பண்பை மிகப் போற்றிய சால்பு வியப்பிற்குரியது.

கலையும் பண்பாடும், உணர்வும் அறிவும் பெற்ற குழந்தைகள். இவற்றின் இணைப்பையே அம்மையப்பர் உருவச் சிலையில் தமிழகக் கலைஞர்கள் நிலைநாட்டிக் காட்டியுள்ளனர். அம்மை கலையின் உருவம் அப்பர் பண்பாட்டின் உருவம் இரண்டும் பிணைந்த நிலையே 'கலைப் பண்பாட்டு'த் தமிழ் மெய்யுணர்வுக் கொள்கையின் முழுமைநிலை. அம்மையப்பர் "(Aphrodite) சிலை, நமக்கு உணர்த்தும பண்பாட்டுக் கலையறிவை நாம் நன்குணர வேண்டும்.

மொழி வாழ்விலும், கலைவாழ்விலும் மக்கள் வாழ்வே ஊடுருவி உறைந்த உண்மை இதனால் நன்கு தெளிவாகும்! மக்களுககுக் கலை வாழ்வுகலந்த பண்பாட்டு வாழ்வு வேண்டும். அந் நிலையைத் தமிழ் மொழியும் தமிழ்க் கலையும் அளிக்கிறது.

பண்டைத் தமிழரின் நுண்மை சான்ற மெய்யுணர்வு வளம் பழுதிய கொள்கைகளைச் சங்க இலக்கிய வாயிலாகக் கூர்த்துணர்ந்து தெளிந்து இந்த நூற்றாண்டு வாழ்வை வளமாக்கிக் கொள்ள வேண்டியது தமிழர் கடமை.

———

நீண்டகாலம் உயிர் வாழ......?

[டாக்டர் ஆ. சண்முகவேலன், எம். ஏ., பி. ஓ. எல்.,
[Siddha Research officer, Central Council of Indian Medical Research,
Saraswathi Mahal Tanjore]

விஞ்ஞானம் வானுற வோங்கி வளம்பெற வளர்ந்து நிற்குங் காலம் இது; சுருங்கக்கூறின் அணுசக்தியின் ஆட்சிக்காலம் இது. அணு சக்தியின் உதவியால் மனிதன் மண்ணையும் விண்ணையும் அளக்கும் காலம் இது அணு சக்தியினால் சந்திர மண்டலத்தையும் எட்டிப்பிடிக்குங் காலம் இது; இந்த விந்தையைக் கண்டு வியந்து நிற்கின்றான் மனிதன்; மானிடன் செய்யும் மாண்புறு செயல் என்று மயங்குகிறது உலகம்.

ஆனால், உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஒருவர் அந்தோ இஃது என்ன வாழ்வு? என்று வருந்துகிறார்; உயிரினும் மேம்பட்ட பொருள் ஒருவனுக்கு உலகில் வேறொன்றுமில்லை. நாளைக்கு நாம் உயிரோடிருக்கும் வகை ஒன்று அறிந்திலமே. தன் உயிரைப் பாதுகாக்கும் உபாயத்தை அறியாமல் உலகியல் விஞ்ஞானத்தை அறிந்து என் பயன்? என்று ஏங்கினார் அந்த விஞ்ஞானி. மனிதன் தன்னால் தோற்றுவிக்கப்பட்ட இயந்திர சாதனங்களுக்கும் பௌதிக கலைகளுக்கும் அடிமையாகிவிட்டானே; அவைகள் மனிதன் வாழ் நாளை வளரவிடவில்லையே; புதிய விஞ்ஞான வளர்ச்சி மனிதன் உயிரை ஒவ்வொரு கட்டத்திலு தேய்த்து நசுக்குகிறதே. மனிதனை நீண்டகாலம் வாழவைக்காத விஞ்ஞானம்—உண்மையில் விஞ்ஞானமாகுமா? இது மனிதனை அஞ்ஞானப் பாதையில் இழுத்துச் சென்று அந்தோ வீணாக அழிந்துபடுவதையன்றோ காட்டுகின்றது என்று புலம்புகின்றார் நோபல் பரிசு பெற்ற அந்த விஞ்ஞானி; நம் முன்னோர்கள் வாழ்ந்த இயற்கையோடு இசைந்த வாழ்வுகெட்டு விஞ்ஞானம் நம்மை செயற்கைப் பாதையில் இழுத்துச் சென்று படுகுழியில் வீழ்த்துகின்றதே என்று ஏங்குகின்றார் அந்த விஞ்ஞானி. நிலம் நீர் தீ காற்று வான் ஆகிய இயற்கை ஐந்தையும் பற்றித் துருவி ஆராய்ந்த மனிதன் அதன் பிரதி பிம்பமாக விளங்கும் தன்னைப்பற்றி அறியவில்லையென்றும் தன்னைப்பற்றி அறியும் விஞ்ஞானமே உலகிலுள்ள விஞ்ஞானங்களுக்கெல்லாம் மேம்பட்டதென்றும் கூறுகின்றார் அந்த மாபெரும் விஞ்ஞானி.

அவர்தான் டாக்டர் அலெக்ஸாஸ் காரல்; அவர் தாம் எழுதிய "இன்னும் அறியப்படாத மானிட இரகசியங்கள்" (Man the unknown) என்னும் ஆங்கில நூலில் எழுதியுள்ள கருத்துக்களே மேற்கூறப்பட்டவை.

ஆனால் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மண்ணில் வாழ்ந்த பேரறிஞர் திருமூலர் கூறிய திருவாக்கு என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது,

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்"

தன்னைத்தான் அறிந்த திருமூலர் கூறுகின்றார். திருமூலர் போன்ற ஞானிகள் நாம் நீண்டகாலம் உயிர்வாழ்வதற்கு அருளிச் செய்த நூல்கள் பல; அவர் வழித் தோன்றிய சித்தர்கள் பலர்;

சாகாக் கல்வி

பெறுவதற்கும் அரிய இந்த மானிடப் பிறப்பில் சாகாக்கல்வியைப் பெறுவதே எல்லாவற்றினும் தலை சிறந்த பேருகும்; 'சாகாக் கல்வி" பற்றி உலகிற்கு முதன் முதலாக எடுத்துப் போதித்த பெருமை தமிழ் மண்ணில் தவமபுரிந்த ஆதி சித்தர் திருமூலருக்கே உரியது. ஞான சித்தர்கள் கண்ட சாகாக் கல்விதான் மெய்க் கல்வி; உலகியல் கல்விக்கு நாம் முற்றிலும் அடிமையாகக் கூடாது.

உடலினுள்ளே பலவகைச் சுரப்பிகளிலிருந்து 'ஹார்மோன்' (Hormone) சத்து நீர் சுரப்பதையும் அது உடல் நீடித்திருப்பதற்கு இன்றியமையாதது என்பதையும் இக்கால வைத்திய நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்; எனினும் நீண்டகாலம் உயிர்வாழ்வதற்குரிய அமுத சுரபி ஒன்று கபாலத்தில் உள்ளதென்றும் அது மூடப்பட்டுள்ளதென்றும் அதிலிருந்துசுரக்கும் அமுதம் சிறந்த ஜாடிகளில் பாயுமானால் நீண்டகாலம் உயிர்வாழ முடியுமென்றும் டாக்டர் இராபர்ட் எஸ். டி. இராப் என்பவர் தாம் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர் போன்ற சித்தர் பெருமக்கள் வாசிப் பழக்கத்தால் அத்தகைய அமுதநாளத்தைத் திறந்து நீண்டகாலம் வாழ்ந்தனர். பழம்பெருமை பேசிப் பயனென்னை? இதற்கு ஆதாரம் என்ன என்று அன்பர்கள் கேட்கக்கூடும். திருமூலர் அருளிச்செய்த திருமந்திரத்தில் மேற்கோள்கள் பல உள்ளன.

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின்று ஆடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வி யிலோரே.

சாகாக்கல்வி பற்றிய நுட்பம் அறியாதோர் புறத்தேயுள்ள தீர்த்தங்களை நாடிச் செல்வார்களென்பதும் சாகாக் கல்வி கற்றோர் தன் அகத்தே பாயும் அமுதசுரபியை அறிந்து பயன்படுத்தியவர்களென்பதும் இதனால் தெரிந்துகொள்கிறோம்.

"மலையாள் சிரத்திடை வானீர் அருவி
நிலையாரப் பாயும் நெடுநாடி யூடே" என்றும்

"விந்துவும் நாதமும் மேவியுடன் கூடி
சந்திர னோடே தலைப்படுமாகிடில்
சுந்தர வானத்து அமுதம்வந்து ஊறிடும்"

என்னும் மந்திர வாக்குகள் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன. பயிர் செழிப்புற வளர்வதற்குப் பாத்தியில் நீர்பாயவேண்டும், அந்நீர் வெற்றிடத்தில் பாயுமானால் பயிர் வாடி அழியும; அதுபோல் உடலில் ஊறும் அமுத நீர் அந்தோ வீணே கழிவதனால் வாணாள் வீணாளாகின்றதென்பதை மூலர் பின்வரும் பாட்டில் விளக்குகின்றார்

"உடலிற் கிடந்த உறுதிக் குடிநீர்க்
கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கும்
உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்
நடலைப் படாதுஉயிர் நாடலுமாமே"

எனவே, உடலிலுள்ள ஏழு ஆதாரங்களிலிருந்து சுரக்கும் சத்து நீர் கலை மூச்சுக் காற்றின் உதவியால் இரத்த நாடிகளில் சரிவரப் பாயும் படி செய்யாததால்தான், கூத்தி வளர்த்த கோழிக் குஞ்சுபோல் உடல்வற்றி ஆயுட்காலம் குறைகிறதென்று திருமூலர் கூறுகின்றார்.

"ஏற்றம் இரண்டுஉள ஏழு கிணறுஉள
மூத்தாள் இறைக்க இளையாள் மடைமாறப்
பாத்தியில் பாயாமல் பாழ்எங்கும் பாய்ந்தது
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ஆமே"

"மேலையண் ணாவில் விரைந்து இருகாலிடில்
காலனும் இல்லை கதவுந் திறந்திடும்
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும
பாலனும் ஆவான் பராநந்தி ஆணையே"

எனவே, சித்தர்கள் வாசிப் பழக்கத்தினால் உடலில் அமுத ஊற்றைத் திறக்கும்படிச் செய்து நோய் இன்றி நீண்ட காலம் உயிர்வாழ்ந்து பேரின்பப் பெருவாழ்வு எய்தினர் என்று தெரிந்து கொள்கிறோம. இத்தகைய சாகாக் கல்விமுறை பற்றி சித்தமார்க்கம் கூறியிருப்பது போல் உலகில் வேறு எந்நாட்டிலும் சொல்லப்படவில்லை யென்று தவத்திரு இராமலிங்க அடிகளாரும் கூறியுள்ளார். எனவே சாகாக் கல்வியின் அடிப்படைத் தத்துவந்தான் என்ன என்று அன்பர்கள் வினவலாம்.

அண்டத்திலுள்ளதே பிண்டம் ; பிண்டத்திலுள்ளதே அண்டம்; "அண்டமும் பிண்டமும் ஒன்றே. அறிந்துதான் பார்க்கும்போது" என்பது ஒரு சித்தரின் வாக்கு. நிலம் நீர் தீ காற்று வான் எனும் ஐந்து இயற்கையும் அண்டம் ; இந்த ஐந்தின் அமைப்பே பிண்டம்

அவை (உடல்) மெய் (நிலம்) வாய் (நீர்) கண் (தீ) மூக்கு (காற்று) செவி (வான்) இதில் நிலம் நீர் இரண்டும் சக்தியின் அம்சம். தீ காற்று வான் சிவத்தின் அம்சம்; மண்ணும் நீரும் அழியக்கூடியவை தீ காற்று வான் ஆகிய மூன்றும் அழியக் கூடாதவை; எனவே சித்தர்கள் வான் காற்று தீ ஆகிய மூன்றையும் சாகாத் தலை, வேகாக் கால், போகாப் புனல் என்று விளக்கினர்.

வாயு மூச்சுக் குழாயிலும் அனல் இருதயத்திலும் வான் கபாலத்திலும் இயங்குகின்றன. வாசிப் பழக்கத்தினால், உடலை இவ்வாறு அழியக்கூடிய நீர் நிலம் ஆகிய இரு தன்மைகளிலிருந்து பிரித்து அழியா நிலையை அடையச் செய்தனர். இதுவே சாகாக் கல்வியின் அடிப்படை. திருவள்ளுவரும் சுவையொளி ஊறு ஓசை நாற்றம் எனறைந்தின் வகை தெரிவான் கட்டே உலகு என்று கூறினார்.

சாகாத தலையிது வேகாத காலாந்
தாமிது காண் எனத் தயவுசெய் துரைத்தே
போகாத புனலையுந் தெரிவித்து என் உளத்தே
பொற்புற அமர்ந்தோர் அற்புதச் டரே

என்று வள்ளலார் பாடியிருப்பதையுங் காண்க.

எனவே. புலனடக்கத்தினால் பிராண சக்தி, பிராண சக்தியால் மன அடக்கம் மன அடக்கத்தினால் விந்து அடக்கம்; வாசி அடங்க மனம் அடங்கி அதனால் விந்து அடக்கம் வாயு அனல் வான் என்ற மூன்றும் (பிராணன் சித்தம் விந்து) ஒன்றை ஒன்று கவ்வி நிற்கின்றன.

பிராணன் மனத்தொடும் பேராதடக்கிப்
பிராணன் இருக்கில் பிறப்பு இறப்பு இல்லை

என்று திருமூலர் கூறியிருப்பதையுங் காண்க.

மேலும் நீண்ட காலம் உயிர் வாழ்வதற்குரிய காயகற்ப மருந்து முறைகளைப் பற்றியும் சித்தர் நூல்களில் காண்கிறோம்; உண்ணத் தககவை இவை — உண்ணத் தகாதவை இவை. மலச்சிக்கலால் நோய் வருவது பற்றியும் அவைகளை நீக்குவதற்குரிய உபாயமும், நூற்றுக்கணக்கான கற்ப மூலிகைகள் பற்றியும் சித்தர் நூல்களில் விரிவாகக் காணலாம்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

என்று திருமூலர் கூறுகின்றார். உடம்பை வளர்க்கும் உபாயம் என்ன என்று இதுவரை விரிவான ஆராய்ச்சி செய்யப்படவில்லை. நீண்டகாலம் உயிர்வாழ்வதற்குரிய சித்தர்கள் கண்ட உபாயம் என்னென்ன என்பதை ஆராய்வோமாக,

(தொடரும்)

வாழ்வாய்!

த. பழமலை, I. M. A., அண்ணாமலை நகர்.

ஐயாநீ கைவீசி நிமிர்ந்து நின்றே
அழகாகத் தமிழ்ச்சந்தம் பாடும் போது
மெய்யெல்லாம் தேனாகும்! அந்த இன்ப
மேன்மைக்கு இனியெந்த முகத்தைப் பார்ப்பேன்?
பொய்யாகப் போகாதோ இறப்பு! நின்றன்
பூவாயில் தமிழ்மீண்டும் ஒலித்தி டாதோ!
கையற்றுத் தளர்கின்றேன் — 'தம்பி' என்று
கனைக்கின்ற மொழியெங்கே எங்கே? ஐயா!

இசைப்பாடி இசையோடிங் கிருந்த எங்கள்
இசைவேநீ இனியில்லை — என்றால் நெஞ்சைப்
பிசைகின்ற துயருக்கும் அளவே இல்லை!
பிரிவென்றால் தமிழுக்கும் உண்டோ ஐயா?
அசைகின்ற மிடுக்கான நடையும் சொற்கள்
ஆராய்ச்சித் திறனும்யாம் மறக்கப் போமோ!
பசையுள்ள தமிழ்நெஞ்சின் நினைவில் உன்றன்
பயில்கின்ற சிரிப்பென்றும் வாழும் ஐயா!

இமிக்கூட மெய்யில்லை! தாத்தா நீயும்
இறந்திட்டாய் என்கின்றார் உண்மை இல்லை!
தமிழுக்கிங் கிறப்பில்லை! பிரிவும் இல்லை!
தணியாத அன்புக்குச் சாவே இல்லை!
இருக்கின்றாய் நெஞ்சத்தில் தமிழைக் கற்கும்
இதயத்தில் நீயென்றும் இறப்ப தில்லை!
விருப்புள்ள ஐயாநீ எங்கள் வீட்டில்
விளையாடும் பிள்ளைக்குப் பெயராய் வாழ்வாய்!

(சிதம்பரத்தில், 5—4—65 அன்று தமிழன்னையின் திருவடி நிழலடைந்த தமிழ்த்தாத்தா, திரு. உலகவூழியனாரின் இறுதிச் சடங்கின்போது இடுகாட்டில் ஓர் இளந்தோழன் பாடிய இரங்கற்பாக்கள்.)

* 'கோடையின்பம்'

(புலவர், ந. செகதீசன், தமிழன்பன்)

தமிழன்னைக்கு :

இன்பத் தமிழன்னாய்! இங்கவையில் பாப்பாட
நன்றருள் செய்வாய் நயந்து. (க)

வணக்கம் :

ஏட்டரங்கில் நெஞ்சரங்கில் நடன மாடும்
இன்றமிழ்வல் முருகழகா! இங்கி ருப்போர்
கூட்டரங்கம் ஆகியெழில் கொண்டி ருக்கும்
குளிர்தமிழில் பலாச்சொல்லில் எழுவர் பாடும்
பாட்டரங்கத் தையா! நற் கவிதை வல்லோய்!
பரிந்துமைநான் வணங்குகிறேன்! இன்ப மெல்லாம்
கேட்டிரங்கும் படிகவிதை பாட வந்த
கேண்மைமிகு கவிஞர்காள்! வணக்கம் ஏற்பீர்! (உ)

எழுகின்ற செப்பரிதித் தோற்றங் கண்டே
எழுச்சிகொளுந் தாமரைபோல் கவிதை கேட்க
எழுந்தருளி யிருக்குந்தாய் தந்தை மாரே!
இனியதமிழ்ப் பாட்டியரே! பாட்டன் மாரே!
தழுவிளமைக் காளையரே! பெண்ம யில்காள்!
தங்கவுளச் சிறுகிளிகாள்! களித தும்ப
விழுப்பமிகும் உடுமலையில் உம்மைக் கண்டே
மிகவணங்கி வாழ்த்துகிறேன்! வணக்கம்! வாழ்க! (ங)

வருபொருள் : [இயற்கைக் கொடை]

கற்பவைகள் கற்றுணர்ந்த நெஞ்சைப் போலக்
காணுபெரு விரிவானம்! கவிஞர் பாட்டுக்
கற்பனைபோல் ஆழ்ந்திருக்கும் கடல்கள், காதல்
காரிகையர் யாழ்மழலை மிழற்றி ஓடிப்
பொற்புறவே வருமேடை, சிறுகு ழந்தை
புன்னகையும் என்னகையும் ஒன்றே யென்று
பற்பலவாய் மலர்ந்தொளிரும் பூவின் கூட்டம்,
படர்கொடிகள், செடிவளங்கள், சோலை, தோப்பு (ச)

புகழ்போர்த்து நிமிர்ந்துதிகழ் அறிஞர் போலப்
புயல்போர்த்துத் தலைநிமிர்ந்த குன்றம் மின்னல்
தகதகக்கும் அருவியெழில் மீட்டும் பாட்டு,
தண்ணளியோர் உளமிருந்து போந்து லாவும்
பகரரிய இனிமைமொழி சொற்கள் போலப்
பரவுகுளிர் பூசிவருந் தென்றற் காற்று,
நிகரற்ற நன்னெஞ்சர் நிதியம் போல
நேயநிழல் பரப்புநெடு மரங்கள் கூட்டம். (ரு)

தேர்தல்நாள் வாக்காளர் மனைப்பு குந்து
தேனொழுகு மொழிபழகு வேட்பா ளன்போல்
சீர்துறந்து செயல்புரியா தென்றும் ஆக்கச்
செம்மைதரும் இன்மொழிசொல் பறவைக் கூட்டம்,
ஓர்நாளைக் கொருகட்சி தழுவு கின்ற
உளுத்தரென ஆகாமல் என்றும் வானை
ஆரத்தான் தழுவிவரும் பரிதி அன்பை
அழகொளியாய் மாற்றிச்செய் திங்கட் செல்வன் (சு)

இங்கிந்தக் கொடையெல்லாம் இயற்கைத் தாய்தான்
இனிதிந்த உலகினர்க்கே செய்தாள்! ஐந்து
பங்கமறு பூதங்கள் முதலாம் யாவும்
பாரிலவன் பரிந்தளித்த கொடையே யன்றோ?
பொங்குபல வளமெல்லாம் ஆயுந் தோறும்
புரிந்தளித்து வருகின்றாள்! நமது வாழ்வில்
தங்குதடை யறவின்பம் தழைக்கக் காணின்
தாயவள்செய் கொடைப்பயனாய் இன்பங் கொள்வாள்! (எ)

பொருட் கொடை:

கல்விதரும் ஆசான்கைப் பிரம்பு பட்டுக்
கரஞ்சிவக்கும் சிறுவருக்குப்! பரிதிச் செல்வன்
புல்லியின்பந் தரப்பெற்ற மாலை நேரம்
புதுநெருப்பாய்ச் சிவப்பேறும் மேலை வானம்!
மெல்லமெல்ல அருகணைந்து தழுவும் போது
மெல்லியர்கள், வல்லியர்கள், கதுப்பி ரண்டும்
சொல்லரிய நாணத்தால் அலரி ஆகும்!
சுடர்விழிகள் கலவியினால் கோவை ஆகும்! (அ)

காய்சிவக்கும் கனியாக முதிரும் போது!
கனல்சிவக்கும் காற்றூதி வளர்க்கும் போது!
வாய்சிவக்கக் காரணங்கள் காதல் மாதர்
மடித்தளிக்கும் வெற்றிலையாம்! இன்றேல் வண்ணந்
தோய்ந்திருக்கும் இதழ்பதிக்கும் முத்த மாகும்!
தொல்லறிஞர் மனஞ்சிவக்கும் ஆய்வுந் தொண்டால்!
தீயருளஞ் சிவந்திருக்கும்! சூழ்ச்சி எண்ணத்
தீவளர்த்துக் குளிர்காயும் கார ணத்தால்! (கூ)

பிணிபெற்று நலியாத கையி ரண்டும்
பிறர்க்கெடுத்து முடிவின்றி வழங்குந் தூய
அணிபெற்று நலிகின்ற இயல்பி னாலே
அடைந்திருக்கும் சிவப்புநிறம்! எடுத்துக் காட்டு
மணிபெற்ற நிறம்பெற்று மிளிரும் செல்வ
வளம்பெற்று முதிருகின்ற முதிரச் சாரல்
குணில்கொண்டு முரசடித்துக் கொடுத்து வாழ்ந்த
குமணனெனும் வான்மனத்தோன் கொண்டல் கைகள்! (கo)

ஊற்றுக்கைக் குமணனிந்த உடும லைக்கே
உறவுடையோன்! அவனன்று புலவர் உற்ற
ஆற்றவொணு வறுமைகண்டு மனமி ரங்கி
அறுத்துத்தன் தலைகொடுக்கத் துணிந்த செய்கை
போற்றுத தமிழ்நெஞ்சம் உண்டா? உண்டா?
புழுக்கஞ்செய் வறுமையெனும் வெப்பம் போக்கப்
போற்றுபொருள் விசிறியினைப் புரிந்த ளித்த
பொன்னனையான் தனைமறந்தார் உண்டா? உண்டா? (கக)

அறமுணர்ந்து பரிசிலர்க்குத் தமது நாட்டின்
அழகூர்கள் முந்நூறும் மகிழ்ந்த ளித்தான்!
சிறகடித்து வந்துதமிழ்ப் பாட்டி சைக்கும்
சிதருத கலைமலிந்த பறவைப் பாணர்
உறவுகொளும் மரமாகி உதவி நின்ற
ஒப்பகன்ற பறம்புமலைப் பாரி யைத்தான்,
மறந்திருக்கும தமிழ்நெஞ்சம் உண்டா? உண்டா?
மறந்ததெஞ்சம் தமிழ்நெஞ்சம் ஆவ துண்டா? (கஉ)

கொடி பெற்ற கொடை:

அருள்நறவு வடியன்பு வண்பூ நெஞ்சன்,
அன்றொருநாள் உலாவந்தான்! கண்க ளுக்கு
விருந்துவைத்த மலைச்சரிவைக் கண்டு கண்டு
வியப்படைந்த விறல்மன்னன், முன்னர்த் தன்மென்
உருவநல'ன் கெட்டழிந்து தரைக்கி டந்த
ஒருமுல்லைக் கொடிகொம்பின் துணையி ழந்தே
உருகியுளங் கருகியுடல் வாட்ட முற்றே
உயிர்துடித்துத் துவளுவதைக் கண்டான்! நின்றான்! (கங)

நின்றவனைப் பார்த்தகொடி அவன்ம னத்து
நிறையருளைப் பெறவிரும்பி, 'ஓ'ர்வின் ணப்பம்!
அன்புமனம் உடையரசே! கனிந்த சொல்லோய்!
அடியேனுக் குத'வுகென்று பூனைப் பல்போல்
துன்னரும்புப் பல்தெரியக் காட்டி வேண்டத்
தூய்சிந்தைச் சொற்செயலோன் உருகிப் போனுன்!
தன்னுயர்ந்த, மணித்தேரை அக்கொ டிக்குத்
தழுவுதுணை யாககவிட்டு நடந்து வந்தான்! (கச)

தேடிவந்து பயிர்வளர்க்கும் ஆற்றைப் போலத்
திருவிழந்தோர் இருப்பிடத்தைத் தேடிச் சென்றே
நாடிநல்ல கொடைபுரிந்தான்! ஆற்று வெள்ளம்
நல்கூர்ந்து விடுவதுண்டு; பெருகி வந்து
கோடிநலம் கொழிக்கசெய் பாரி வள்ளல்
கொடைவெள்ளம் ஒருநாளும் குறைந்த தில்லை!
ஆடியலை கடல்வெள்ளம் கரிக்கும்! அன்னோன்
இன்பாழி வெள்ளமென்றும் இனிப்பி னிப்பு! (கரு)

போர்வைபெற்ற பொன்மயில் :

பாவியல்வல் பாவாணர் பலரும் போற்றும்
பண்புடையான் ! அன்புடையான் ! திறமை மிக்கான் !
ஆவியர்கள் குலவிளக்கு ! சூழ்ந்தி ருந்தே
அகலாமல் வளமெல்லாம் நலம்பெ ருக்கும்
ஓவியப்பொன் பொதினிதனை ஆள்வோன் ! அன்னோன்
ஒருகையைப் பார்த்துப்பாப் பாடு வோர்கள்
கூவிவரும் வறுமைதனை ஒருகை பார்ப்பார் !
குளிர்ந்துமனம் வாழ்த்திசைக்கும் பேகன் என்போன் (கசு)

மலைவளத்தைப் பொழில்வளத்தைக்காண வேட்டு
மாவூர்ந்தான் ! மரவளத்தைப் பழும ரத்துக்
கலைவளத்தில் கண்டான் ! மென் கொடிவ ளத்தைக்
கொம்பனைத்து நகுமுல்லைச் சிரிப்பிற் கண்டான் !
சிலைவளத்தை நிலாமுகத்துக் குறச்சி றுக்கிச்
செவ்வாழை உடற்கண்டான் ! சிலிர்த்து நின்றான் !
நிலைவளத்துக் குன்றருகே சோலை யொன்று
நெடுமரத்துக் கிளைக்கரத்தால் அழைக்கப் போனான் ! (கள)

"வரவேண்டும் ! வரவேண்டும் !" எனக்க னிந்து
மகிழ்சோலை இளமங்கை கொம்ப சைத்துத்
தரைமுழுதும் மலர்தூவிப் பழங்கள் ஏந்தித்
தத்தைமுதல் பல்பறவை யிசைஞர் பாடச்
சுரந்தெழுநல் லன்புடனே நிழல்வி ரித்துச்
சுடர்க்கொடிகள் தமைத்தென்றல் வீச ஆணை
விரைவாக இட்டுடனே தலைகு னிந்து
மிகவணங்கி வரவேற்றாள் பேகன் தன்னை ! (கஅ)

சோலைப்பெண் தனதுசெல்வ நடனப் பெண்ணைச்
சுடர்க்கொத்து முடிமயிலை ஆட விட்டாள் !
நீலப்பூங் குயில்குழலை ஊத, வண்டு
நெஞ்சள்ளும் யாழிசைக்க, வீழு கின்ற
பாலைப்போல் வெள்ளருவி தாளம் போடப்
பதமறிந்து பழகுநடத் தடைவு ணர்ந்து
காலைப்பூ மேடையிலே பெயர்த்துத் தோகைக்
கவின்விரித்துக் கழுத்தசைத்துக் கூத்துச் செய்தாள் ! (கசு)

பார்த்திருந்த பேகனந்தத் தோகைக் கூத்தைப்
பழகியரண் மனையாடும் பாவைக் கூத்தில்
சேர்த்திணைத்தே ஒப்பிட்டான் ! தோகை யற்ற
சிற்றிடையார் செய்கூத்தில் கழுத்த சைப்பில்
பார்த்ததில்லை இவ்வழகு ! பளப ளப்பு !
பலகோடி வண்ணமிந்த மயில்ப டைக்கும்
ஓர்கூத்தில் காணுகின்றேன் ! ஆசா னின்றி
உயர்கூத்தி மயில்கற்றாள் ! மகளா கற்றாள் ? (உ0)

'இல்லையில்லை" எனத்தேறி நடிப்ப சைப்பில்
இரும்புமனந் தனைக்கூடப் பிடித்த சைக்க
வல்லையடி! வனமயிலே! கலைப்பி ழம்பே!
வளைந்தாடி உளந்தேடும் இன்பம் நல்கும்
நல்லையடி! எனக்குனக்குப் பரிச ளிக்க
நனியாவல் துள்ளுதடி! எனப்பு கழ்ந்து
வள்ளுவன்தன் பொன்மேனி போர்த்த போர்வை
மகிழ்ந்தெடுத்தான்! அணிவித்தான்! மயிலே ஆனான்! (உக)

செல்வப் பயன் :

வாயற்ற உயிர்கட்கும் கொடை யளித்து
மனங்களித்த மன்னரிவர் நெஞ்சில் தூய
தாயுற்ற அருளிருந்த தன்மை யாலே
தாவற்று மக்களெலாம் வாழ்ந்தி ருந்தார்
நாயுற்ற தெங்கங்காய் என்ற செல்வம்
நன்றறியார் கரம்பட்டுத் துருப்பி டித்து
நோயுற்று முடங்குகின்ற நிலைமை யின்று
நொறுங்கிற்று? நொறுங்கியது மனவ ளந்தான்! (உஉ)

வீசுதற்கே இளந்தென்றல்! மழைபொ ழிந்து
மின்னுதற்கே கார்மேகம்! அறைத்தெ டுத்துப்
பூசுதற்கே நறுஞ்சாந்தம்! மாலை யாக்கிப்
பூண்பதற்கே ஒளிமுத்து! பண்வ டித்துப்
பேசுதற்கே இனியகுழல்! சுடரெ டுத்துப்
பெருக்குதற்கே சீதநிலா! கையி லுள்ள
காசெதற்கு?ப் பதுக்குதற்கா? மனமு வந்து
கைநிறையப் பைநிறையத் தருவ தற்கே! (உங)

இவ்வுணர்ச்சி அந்நாளில் இருந்த தாலே
இருப்பதெலாம் கொடுப்பதென எண்ணங் கொண்டார்!
கவ்வுதுயர்ப் பசிப்பிணியை வறுமை தன்னைக்
காசெடுத்துக் குழிதோண்டிப் புதைத்து நல்ல
செவ்வையுறு புன்முறுவல் வறியோர் நெஞ்சில்
செவ்விதழில் குடியேறி வாழச் செய்தார்!
ஒவ்வாத துயர்ச்சேய்கள் பெற்றெ டுத்தே
ஊறுசெயுங் கடும்பஞ்சக் கருவ றுத்தார்! (உச)

ஈத்துவந்து இன்புற்றோர் :

தாவுவளத் தலைநகராம் கோவ லூரில்
தழைத்திருந்து கொடைபுரிந்த ஈரக் காரி!
பாவலராம் ஔவைமுதல் பற்ப லர்க்குப்
பரிந்துநிழல் விரித்தளித்த அதியன்; எண்ணின்

நாவில்நீர் சுரக்கச்செய் பலாப்ப ழத்து
நற்கொல்லிக் கார்மேகம் வல்வில் ஓரி!
பூவளிக்குங் கொடைத்தேனை வண்ட ருந்திப்
போற்றியிசை பொழிபொதிகைத் தாய்ஆய்! இன்னும்—(உரு)

தோட்டிமலை தனிலிருந்து வறுமை யோட்டித்
தொல்லையெனும் பெருங்கடலில் தவிப்போர் தம்மை
நீட்டியொளி காட்டியின்பக் கரைப்ப டுத்தி
நின்றகலங் கரைவிளக்காம் நள்ளி! என்றே
பாட்டுக்குப் பொருளாக வாழ்ந்தி ருந்த
பரிவுநெஞ்சர்ப் பஞ்சமில்லை! பஞ்ச மில்லை?
நாட்டிலவர் ஈத்துவக்கும் இன்பம் ஒன்றே
நன்னோக்காய்ப் பொன்னோக்காய்க் கொண்டி ருந்தார்!(உசு)

வரிதோறும் தேன்வைத்துக் கனிந்த பாடல்
வட்டித்த பெருபபுலவர் குமட்டூர்க் கண்ணார்
விரிந்தமன நெடுஞ்சேர லாதன் தந்த
வியனூர்கள் ஐந்நூறும் பெற்றார்! மேன்மை
தெரிவுதர நார்முடிச்சே ரல்பால் அன்பால்
தீட்டியசீர்ப் பாட்டிற்குப் புலவ ரான
பெரியபுகழ் தரித்திருந்த காப்பி யாற்றுக்
காப்பியனார் பெற்றபொன்னோ நான்கு பத்து (உஎ)

நூறெடுத்த ஆயிரமாம்! மன்னன் நாட்டு
நுவலரிய ஆட்சியிலும் பாகம் உண்டாம்!
சீரெடுத்த புதுப்பாடல் பரணர் பாடச்
செவிகொடுத்துக் கேட்டவச்செங் குட்டு வன்தான்
நீரெடுத்த வளம்பெற்ற உம்பற் காட்டு
நேர்வாரி யுடன்தனது சிறந்த செல்வப்
பேறெடுத்து வாழவல்ல மகனைத் தந்தான்!
பீடுமிக்க செல்வத்துக் கடுங்கோ தன்னைப் (உஅ)

பாடியவோர் பாவலராம் கபிலர் அந்நாள்
பரிசிலெனக் குன்றேறிக் கண்ட எல்லை
நீடியபேர்ப் பரப்பெல்லாம் பெற்றும் பொன்னால்
நிறைமுட் டை தரப்பெற்றார்! பசியி னாலே
வாடியவோர் வயிறுடையார்! ஆனால் பட்டு
வாடாத கவியுடையார்! கடிய லூரிற்
கூடியவோர் உருத்திரங்கண் ணனெனும் சால்பு
குலவுபெரு புலவர்பட் டினப்பா லையை (உகூ)

இயற்றியதால் கரிகாலச் சோழன் ஈந்த
பதினாறு இலக்கம்பொன் எய்தப் பெற்றார்!
இயற்றியபோர்க் கலிங்கத்துப் பரணி கேட்டே
எடுத்தெடுத்துத் தாழிசைகள் ஒவ்வொன் றுக்கும்

நயமுணர்ந்த குலோத்துங்கன் பொற்றேங் காய்கள்
தன்றுருட்டிச் சயங்கொண்டார் பக்கம் விட்டான்!
அயலாகச் சிலகொடைகள் பற்றிச் சொல்ல
அவாவியதை யித்துடன்நான் முடித்துக் கொள்வேன்! (௧௦)

கல்விக் கொடை :

மண்கொடுப்பார் சிலபேர்கள்! இருந்து வாழ
மனைகொடுப்பார் சிலபேர்கள்! கட்டிக் கொள்ளப்
பெண்கொடுப்பார் சிலபேர்கள்! அவருங் கூடப்...
பிணகொடுப்பார் மழைநிதி அளவில் லாமல்!
விண்கொடுப்பார் கடவுளருந் தவமு யன்றால்!
வியனுலகில் வாழ்வதற்குக் கல்வி யென்னும்
கண்கொடுப்பார் மிகச்சிலரே! அன்னார் செய்யும்
கவின்கொடையே ஒளிகூட்டும்! வழியைக் காட்டும்! (௧௧)

மனக்காட்டில் அறிவோடை பாய்ச்சி நல்ல
மாண்பறத்து விதைதூவி வாய்மை தன்னைத்
தினங்கதிராய்ப் பொழிந்தின்சொற் பாத்தி கட்டித்
திகழ்வயலாய் ஆக்கிச்சீர் அறுவ டைசெய்
இனத்தவர்கள் அறிவுழவர்! ஆசான் மாரே!
இங்கவர்க்கோ இன்பமெலாம் கொடுப்ப தில்தான்
மனத்தவர்கள் ஊதியத்தை நினைத்துப் பார்த்தால்
மகிழ்ச்சிசிறு கடுகளவும் உண்டா? சொல்வீர்! (௧௨)

உயிர்க்கொடை :

அயலவரின் அறந்துறந்த ஆட்சிக் கூண்டில்
அடைபட்ட கிளியாக நாடி ருந்து
பயப்பட்டு நிலைதளர்ந்த காலம்... அன்று
படர்உரிமைக் கனல்பொங்கும் நெஞ்சங் கொண்டோன்!
வயப்புலியாம் சென்னிமலைக் குமரன் கையில்
வைத்திருந்த கொடிகாக்கத் தனது வாழ்வை
நயந்துகொடை செய்திறந்தான்! இறந்த பின்னர்
நம்நெஞ்சில் புகழ்வடிவில் பிறந்தான் மீண்டும் (௧௩)

செந்தமிழர் திருவாழ்வு! செல்வப் பேழை
தெவிட்டாத தேனாறு! கனியின் சாறு!
சிந்தைவளர் தந்தநிலா! இருட்ட ழிக்கும்
செம்பரிதி... பசுந்தமிழை அழிக்க வந்த
இந்தியெனும் ஒருபகையை எதிர்த்தார்! ஆவி
எந்தமிழ்க்கே எனச்சற்றும் தயங்கா தன்று
தந்தவர்கள் நடராசன் தால முத்து!
தடையென்ன இவர்வள்ளல் ஆவ ரன்றோ! (௧௪)

அறங்கிடந்த நெஞ்சுடையான்! அறிவு மிக்க
அரசியலில் தோய்வுடையான்! தனது வாழ்வை
நிறவெறியை அழித்தொழிக்கும் முயற்சிக் காக
நிமிர்ந்தளித்தான்! கென்னடியோர் வள்ளல் அன்றோ?
திறங்குறைந்த நாட்டவரின் உயர்வுக் காகச்
சிறிதளவும் சோராமல் வாழ்வு முற்றும்
உறவாக உழைத்துழைத்தே இன்ப வாழ்வை
உயர்த்திட்ட நேருநல்ல வள்ளல் அன்றோ? (௧௫)

எத்துணையோ தூய்மனத்தர் இழிவ டைந்தோர்
எழுச்சியுற வரலாற்றில் அவ்வந் நாட்டில்
கொத்துதுயர் பலவேற்று நைந்த போதும்,
கோடாலித் தடைவெட்டால் நொந்த போதும்,
செத்தார்கள் தமதுநலன் தனைம றந்து
செய்தார்கள் பலதொண்டு! அன்னோ ரெல்லாம்
ஒத்தார்கள் பயன்கருதா மாரி தன்னை!
உரைக்கின்றேன், அவர்வள்ளல் ஆவ ரன்றோ! (௧௬)

கண்முன் கண்டவர் :

அரசரண்ணா மலைபச்சை யப்பர், சீர்த்த
அழகப்பர் சமால்முகம்ம தெத்தி ராசர்,
தரப்பிறந்த மகாலிங்கம், கோவை வாழும்
தண்ணிகரில் அவினாசி லிங்கம்! என்றும்
கரம்வலிக்க எடுத்தளிக்கும் தியாக ராசர்,
கல்லூரிப் பணிசெய்வீ ரய்யா நல்ல
திரைக்கூத்தர் எம்சீயார் இவர்கள் எல்லாம்!
தெளிவாக நாம் காணும் வள்ளல் அன்றோ! (௧௭)

அன்புக்கொடை :

குழந்தைக்குப் பாசத்தைக் கொடுத்தா லின்பக்
குளிர்நெஞ்சக் கோடைவெலும்! பிரியா தொன்றிப்
பழுக்கின்ற நட்பெடுத்துத் தோழ னுக்குப்
படைத்திட்டால் படைத்திடலாம் அகலா இன்பம்!
வழுவகன்று வாழுகின்ற காதல் வாழ்வில்
பொங்குமின்பம் கொடுப்பதனால் அதிக மாகும்!
தொழுகின்ற இறைவன்பால் பத்தி செய்தால்
தூயறிவன் அருட்கொடையால் இன்பஞ்செய்வான்! (௧௮)

கொடுத்துப் பாருங்கள் :

கொடையின்பம் எனுந்தொடரைக் கூர்ந்து நோக்கின்
கொடுப்பவர்க்கும் பெறுபவர்க்கும் இன்பம் என்று
தடையற்றுப் பொருள்விரிதல் காணீர்! கண்டு
தருவதற்கே முயலுங்கள்! நாளை ஓர்நாள்

விடைபெற்றுப் புறப்படுங்கால் செல்வம் பின்னல்
விம்மிவிம்மிப் பின்தொடரல் உண்டா !? இல்லை !
படைத்தநிதி பரிந்தளித்துப் பெற்ற நன்மை
பழுத்தமன நிறைவுடனே தொடரல் உண்மை ! (௩௯)

இன்பந்தான் வாழ்விலக்காம் ! அதனை எய்த
எதுவழியாம் ? கொடையொன்றே ! ஐய மில்லை !
அன்புமனம் ஆசைத்தேன் பிலிற்றத் தூய
அழகுமுகம் ஒளிமலரக் குற்ற மற்ற
இன்சொல்லாம் மணமபரப்பித் தூக்கிச் செல்ல
ஈடில்லாக் கனிக்குலையை அளிப்பீர் ! என்றும்
நன்ருன அறப்பயன்கள் நண்ணும் ! மக்கள்
நவையில்லா மனமன்றில் என்றும் வாழ்வீர் ! (௪௦)

அயலவனின் பொருளையெல்லாம் அகப்ப டுத்தி
அளித்துலகில் வள்ளலென ஆதல் வேண்டாம் !
அயலவரின் உயிருறிஞ்சிச் செல்வ மீட்டி
அதைக்கொடுத்துப் பெறவேண்டாம் வள்ளல் பட்டம் !
முயலாமல் வந்தபொருள் திருட்டுச் சொத்து !
முனைந்ததனைக் கொடைசெய்தால் இன்பம் இல்லை !
நயமறிந்தும் முறையறிந்தும முயன்று பெற்ற
நன்னிதியைக் கொடுப்பீரேல் படைப்பீ ரின்பம் (௪௧)

அன்பெடுத்துக் கொடைசெய்க ! எவ்வெ வர்க்கும்
அருளெடுத்துக் கொடைசெய்க ! நுகரு கின்ற
இன்பெடுத்துக் கொடைசெய்க ! ஈட்டி வைத்த
தெள்ளளவே ! இருக்கட்டும் ! நமக்கா கட்டும் !
என்றுமனம் கருதாதீர் ! எடுத்தெ டுத்தே
இருகையால் கொடைசெய்க ! அரிய தான
பொன்னெடுத்துக் கொடைசெய்க ! போகும் ஆவி
போகட்டும் !, கொடைப்பொருளாய் ! வருமே இன்பம் ! (௪௨)

முடிவு

நவிகொடுத்த விழியுடையீர் ! பெரியீர் ! இந்த
நல்லவையில் நிறைந்துள்ளீர் ! இதுவ ரைக்கும்
புவிகொடுத்த வளமான புகழை யேற்றுப்
பொலிதமிழில் இயன்றளவு மனம்வ டித்த
கவிகொடுத்தேன் ! களிப்படைந்தேன் ! பெற்ற நீவிர்
கண்டதென்ன ? கடுந்துயரா ? இன்பா ? ஏற்றுச்
செவிகொடுத்தீர் ! அதுபோதும் ! இன்று நீங்கள்
செய்நன்றி மறவேன்நான் ! விடைகொ டுப்பீர் ! (௪௩)

வாழிய செந்தமிழ் !

தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரத்தின் இடம்.

(சாலை இளந்திரையன்)

•••○○•••

தில்லித் தமிழ்ச் சங்க ஆராய்ச்சி அரங்கம் சென்ற ஆண்டில் திருக்குறளைப் பல தலைப்புக்களில் ஆராய்ந்தது. இந்த ஆண்டில் சிலப்பதிகாரத்தைப் பத்துத் தலைப்புககளில் ஆராயத் திட்டமிட்டுள்ளது இவ்வாராய்ச்சித் தொடரின் முதல் கூட்டம் 29—8—65 ஞாயிறு மாலை 3 மணிக்குச் சங்கக் கட்டிடத்தில் தொடங்கியது. தில்லிப் பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேர்ந்துள்ள தமிழ் விரிவுரையாளர் திரு. பா. பாலசுப்பிரமணியன் "தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரத்தின் இடம்" என்ற தமது ஆராய்ச்சியை நிகழ்த்தினர் :

"சிலப்பதிகாரம் தமிழ்மொழியின் முதற்காப்பியம் மட்டுமன்று ; தமிழ் மரபுகளை அப்படியே தழுவி எழுந்த ஒரே காவியமும இதுவே" என்னும் அடிப்படையில் தமது ஆய்வை அமைத்துக்கொண்ட ஆய்வாளர் எடுத்து உரைத்ததன் சுருக்கம் வருமாறு :

"சங்க காலத்துக்கும் சிலப்பதிகாரம் சித்திரிக்கும் காலத்துக்கும் இடையே நீண்ட இடைவெளி இல்லை. ஆயினும் சங்க இலக்கியத் தனிப்பாடல் முறையை மாற்றிக் கதை தழுவிய இலக்கியம் செய்தார் இளங்கோ அடிகள். ஆதலால் காதல் குடும்ப வாழ்வாகிய அகம், பொதுவாழ்வாகிய புறம் ஆகியவற்றின் மரபுகளை அப்படியே ஏற்றுத் தமது காவியத்தை அமைத்துள்ளார் அடிகள்.

"அதே சமயத்தில், சமயக் கருத்துக்களை இலக்கியத்தில் பிரச்சாரம் செய்யும் வழக்கத்தை முதல் முதல் ஏற்படுத்தியவரும் இளங்கோ அடிகளே. சைவ, வைணவ, பௌத்த, சமண சமயங்களைப் பற்றிள செய்திகளெல்லாம இதில் முதல்முதலாக விரவி வந்திருப்பதைப் பார்க்கிறோம். எனவே பின்னால் வந்த காவியங்கள் பெரும்பாலும் சமயச் சார்பு உடையவைகளாக அமைந்ததற்கும் ஒரு வகையில் சிலப்பதிகாரமே வழிகாட்டியாக அமைந்தது. ஆகவே தமிழ் இலக்கிய வரலாற்றில் சிலப்பதிகாரம் ஒரு திருப்புமையம் என்று சொல்லலாம் : இதனோடு பழைய தமிழ்மரபின் செல்வாக்கு தமிழ் இலக்கியத்தில் வலுவிழக்கிறது ; சமயப்போக்கின் செல்வாககு தலைஎடுக்கிறது."

இதைத் தொடர்ந்து நடைபெற்ற கருத்தாடலில் திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையன், குமாரி இந்திராணி, திருவாளர்கள் சீனிவாசவரதன், பார்த்தசாரதி, சாலை இளந்திரையன் ஆகியோர் தத்தம் கருத்துக்களை வெளியிட்டார்கள : தமது ஆராய்ச்சியின் இடையே, "பரத்தைமை சங்கச்சமுதாயம ஏற்றுக்கொண்ட ஒரு பழக்கம், — இலக்கியமும் இலக்கணமும் ஏற்றுக்கொண்ட பழக்கம" என்று ஆய்வாளர் குறிப்பிட்டதை இவர்கள் ஏற்கவில்லை. இதைப் பற்றித் திரு சாலை இளந்திரையன் பின்வருமாறு குறிப்பிட்டார் :

"பரத்தைமை சமுதாய நாகரிகச் செழிப்பின் ஓர் தவிர்க்க முடியாத அம்சம்" என்பது சமுதாய இயலார் சிலரின் கொள்கை. பழைய தமிழ்ச்சமுதாயத்திலும இக்கொள்கை நிலவியிருக்கலாம்.

சமுதாயத்தில் பரத்தைமை நிலவி இருந்தது என்பது இலக்கிய இலக்கணங்களால் தெளிவாக விளங்குவதால் இதை நாம் ஏற்றுக் கொள்ளவே வேண்டியிருக்கிறது' இருப்பினும், உயர்ந்தோர் யாரும் பரத்தைமையை நல்ல உயர்ந்த பழக்கமாக ஏற்றுப்பாராட்டவில்லை என்ற உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது. இலக்கியத்தில் பரத்தைமையைப்பற்றி நிரம்ப வருகிறது; ஆகலால், அதை விளக்கும் இலக்கணமும் அதைப் பற்றிப் பேசுகிறது. ஆனால் எந்த ஒரு புலவனும் பரத்தைமையைப் போற்றிப் பாடவில்லை; பரத்தைமை உடைய தலைவனை அதற்காகப் பாராட்டி உரைக்கவில்லை; பரத்தைமையைப் பற்றிய காட்சிகள் யாவும் கண்ணீர்க்காட்சிகளாகவே உள்ளன என்னும் உண்மையை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

"இந்த வகையில் சிலப்பதிகாரக் காலத்தில் சிறிதே தளர்ச்சி ஏற்பட்டிருந்தது போலத் தெரிகிறது. சங்ககாலப் பேகனின் பரத்தைமை ஒழுக்கத்தைக் கண்டிக்கப் புலவர்கள் இருந்தனர்; சிலப்பதிகாரக் கோவலனின் பரத்தைமை ஒழுக்கத்தை ஏனோ யாரும் கண்டித்ததாகத் தெரியவில்லை. அந்தக் குறை அவனுடைய தலைமைப்பண்பில் ஏற்பட்ட ஒரு மாசாக யாருக்குமே தெரியவில்லை. சதுக்கப்பூதம் கோவலனை "நல்லுயிர்" என்று போற்றுகிறது; அவன் பூம்புகாரை விட்டுப் போனதைக் கேட்டமக்கள் "இராமனைப் பிரிந்த அயோத்திமக்கள் போலப்" பதைக்கின்றார்கள்; மாடல மறையவனும் "இப்பிறப்பில் நீ தீயவினைகளே செய்ததில்லை "என்று அவனைப் போற்றுகிறான். இதுவே பரத்தைமையைப் பொறுத்த வரையில் அக்கால நிலையைப் பற்றிச் சிலப்பதிகாரம் நமக்குக் கூறும் செய்தி."

தொடர்ந்து, சிலப்பதிகாரத்துக்கும் முந்திய இலக்கியங்களுக்கும் உள்ள தொடர்பை விளக்குகையில் சாலை இளந்திரையன் கூறியதாவது: சிலப்பதிகாரம் யாரோ ஒரு கண்ணகிக்கு எழுப்பப் பட்ட சொற்கோயில் அன்று; சங்க இலக்கியம் உருவாக்கித்தந்த மாண்புறு கடவுட்கற்புடைய பெண்மைக்கு அடிகள் எழுப்பிய நினைவுச்சின்னம் அது.

"நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த
கொடியன் ஆகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலை, இன்முகம் திரியாது,
கடவுட் கற்பின் அவன்எதிர் பேணி
மடவை மன்ற, நீ. என கடவுட்
துனியல் வாழி, தோழி; சான்றோர்
புகழு முன்னர் நாணுப,
பழியாங்கு ஒல்பவோ, காணுங் காலே?"

இது, கிடங்கிற் குலபதி நக்கண்ணனார் பாடிய குறுந்தொகை 252 ம் பாடல். இதிலேவரும் பெண்ணைத்தான் கண்ணகி என்ற பெயரில் சித்தரிக்கின்றார் இளங்கோ அடிகள். பெண்மையைப் பற்றிய பழந்தமிழ்ச் சிந்தனையின் முதிர்த்த வடிவமே சிலப்பதிகாரம்.

இரண்டு பரம்பரைகள்

(தில்லியில் பேராசிரியர் தெ. பொ. மீ. ஆராய்ச்சி உரை.)

---o0o---

" தமிழ் இலக்கியத்தில் நெடுகவே இரண்டு பரம்பரைகள் இருந்து வந்துள்ளன. ஒன்று, படிப்பாளிகளுக்கு மட்டுமே பயன்படக்கூடிய இலக்கியம், மற்றது. கல்லார்க்கும் கற்றவர்க்கும் பயன்படக்கூடியதாக எளிமையும், மக்கள் கலைகளும் தழுவி எழுகின்ற இலக்கியம்."

இவ்வாறு. தில்லித் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்த சிறப்புச் சொற்பொழிவில் " நாடோடிப்பாடல்கள்" என்ற தலைப்பில் உரையாற்றிய பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் குறிப்பிட்டார். இக்கூட்டம் 28-8-65 மாலை கேரால்பாக் பகுதியில் நடைபெற்றது. தமது கருத்தை விளக்கும் வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றிலிருந்து பல மேற்கோள்கள் காட்டிய பேராசிரியர், தொடர்ந்து பேசியதாவது :

" சங்க இலக்கிய காலத்திலிருந்து இலக்கிய ஆசிரியர்களில் இரண்டு வகையினர் இருந்தே வந்திருக்கின்றுர்கள். மரபுகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு புலவர்களுக்கே இலக்கியம் பாடி வந்தார்கள் ஒருசார் புலவர்கள். மற்ருெரு சாரார் அவ்வக் காலத்திய மக்களின் மொழிநடையையும் மக்கள் இலக்கிய உருவங்களையும் தங்கள் இலக்கியப் படைப்புக்களில் ஏற்றுக் கையாண்டு மொழிக்குப் புத்துயிர் ஊட்டினுர்கள்.

" சங்க நூல்களில் ஒன்றுன ஐங்குறுநூற்றில் வரும் புனலாட்டுப்பத்து, வேழப்பத்து, எருமைப்பத்து, வெள்ளாங்குருகுப்

" இதன் பிறகு கற்புடைமையைப் பற்றிய சிந்தனையின் மேன்மைப்பண்பு சரியத் தலைப்பட்டது. சிலப்பதிகாரம் வரையில் பத்தினிப் பெண்ணைப்பற்றிய பேச்சு வரும் இடத்தில் அவளோடு யாரோ ஒரு பிறனை இணைத்து எண்ணும் இயல்பு இல்லை. மணிமேகலைக்கு வரும்போதோ, "பத்தினிப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்" என்ற பேச்சு அடிபடுகிறது. பத்தினிப்பெண்ணை வேருெருவன் நினைப்பான் என்று பேசவே அஞ்சியகாலம் சிலப்பதிகாரத்தோடு முடிவடைந்தது. பின்னர் ' நஞ்சனையான அகம்புகுந்த நங்கை'யையும் இலக்கியம் எடுத்துப் பேசுகிறது.

" இந்த வகையில் சிலப்பதிகாரத்தை ஒரு நெடும பாரம்பரியத்தின் கடைசிக் குழந்தையாகக் கொள்ளலாம். அதன் பிறகுதான் தமிழரின் வாழ்விலும் இலக்கிய நோக்கிலும் பெரிய கலப்புக்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது "

ஆராய்ச்சி அரங்கின் அடுத்த கூடடத்தை 12—9—65-ல் நடத்துவது என்றும் அதிலே குமாரி இந்திராணி " சிலப்பதிகாரம் காவியமா ?" என்னும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

பத்து, சிறுவெண்காக்கைப்பத்து, மஞ்ஞைப்பத்து, கிள்ளைப்பத்து, தெய்யோப்பத்து முதலிய தலைப்புக்கள் எல்லாம் மக்கள் பாடல் தலைப்புக்களே. இதில் உள்ள பாடல்களிலும், மற்றச் சங்க நூல் களில் உள்ள அளவு பாட்டு மரபுகள் இல்லை. ஐங்குறுநூறு கருப் பொருள் உரிப்பொருள் மரபுகட்கு மற்ற நூல்கள் போல அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை...

"திருக்குறளின் நடை சங்க நூல்களின் நடையைவிட எளிமை யாக உள்ளது. மக்கள் மொழியை ஏற்றுக்கொண்டு பாடிய தாலேயே வள்ளுவர் பாடலில் எளிமை நிரம்பியிருக்கிறது என்று கூற இடம் உண்டு..." எவன் வந்தானோ அவனைக் கண்டேன்" என்பது தமிழ் வாக்கிய முறை அல்ல; "எவ்வளவுக்கெவ்வளவு படிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அறிவு வளரும்" என்பது தமிழ் முறை வாக்கியம் அல்ல. ஆனால், இந்த (சமற்கிருத) மொழி வாக்கிய முறைகள் அக்காலத் தமிழ் மக்களிடம் இடம் பெற் றிருந்தன என்று தெரிகிறது. அதை தழுவிக்கொண்ட வள்ளுவர்,

"யாதனின் யாதனின் நீங்கியான், நோதல்
அதனின் அதனின் இலன்"

என்று பாடினார்." மரபுவழித் தமிழ் வாக்கிய முறைக்கு மாறுபட்டிருந் தாலும், மக்கள் ஏற்று வழங்கியதாலேயே வள்ளுவரும் இதை மேற்கொண்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது.

"சிலப்பதிகாரமும் மணிமேகலையும் "இரட்டைக் காப்பியங்கள்" என்று கூறப்படுகின்றன. ஆனால் மணிமேகலை கற்ற புலவர் களுக்கே எழுதப்பட்டது; சிலப்பதிகாரம் மக்களையும் மனத்திற் கொண்டு எழுதப்பட்டது. அதனாலேயே சிலப்பதிகாரம் குரவை, வேட்டுவவரி, வள்ளைப்பாட்டு, உரல்பாட்டு முதலிய "மக்கள் பாடல்" முறைகளை எல்லாம் தழுவிக்கொண்டது.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் இப்படியே அம்மானை, நீராடல், பொற்சுண்ணம். தோணோக்கம் முதலிய "மக்கள் பாடல்" வடிவங்களை ஏற்றுக்கொண்டுபாடித் தமிழைப் பொதுமக்க ளிடம் கொண்டு சென்றார்கள். அதனாலேயே, இடைக்காலத்தில் வந்து புகுந்த பெண்வெறுப்புக் கொள்கை மாய்ந்தது...

ஒட்டக்கூத்தர் போன்ற பிற்காலப்புலவர்கள் சமற்கிருதம் கலந்த கடுநடையிலேயே தக்கயாகப்பரணி போன்ற நூல்களை யாத்தனர். அவர்களின் மொழிநடை தொடர்ந்து வந்திருந்தால் தமிழ்மொழி

ஒழிந்தே போயிருக்கும். அந்த ஆபத்திலிருந்து, தமது எளிய நடைக் காவியத்தால், தமிழை மீட்டவர் சேக்கிழார்.

"இப்படியாக மரபுவழி இலககியநெறியும் மக்கள்வழி இலக்கிய நெறியும் மாறி மாறி வந்தன. ஆயினும் ஒன்றை ஒன்று வென்று அடிப்படுத்த முடியவில்லை. ஒரு வகையில் மரபுவழி இலக்கிய நெறியின் கையே ஓங்கிவந்தது. பழைய இலக்கண இலக்கியங்களை விளக்க வந்த உரையாசிரியர்கள் தேவாரம், திருவாசகம் நாலாயிரம் முதலியவற்றிலிருந்து மேற்கோள் காட்டவில்லை. காரணம், அவை எல்லாம் "இழிசனர் வழக்கு" என்னும் சேரிமொழியில் அமைந்தவை என்று கருதினர்கள். மக்களோடு தொடர்புபட விரும்பிய இலக்கியப்போக்கு அவர்கள் பார்வையில் இழிந்ததாகப்பட்டது.

"சித்தர்கள் தோன்றி எளிய இனிய "மக்கள் பாடல் நெறி" யிலேயே உயர்ந்த நீதிகளை எடுத்துரைத்தும் பிற்காலச் சமயவாணர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டு நெறிகளையும் ஏற்றுப்பாடியவர்களும் அவற்றை "அடங்கல்முறை", "பாடுதுறை" எனத்தனித்தனியாகவே பிரித்து நிறுத்தினர்கள். சீர்காழி அருணசல கவிராயர் போன்றவர்களும தலபுராணங்களைப் புலவர் நடையிலும் நாடகக் கீர்த்தனைகளை மக்கள் பாட்டுமுறையிலுமே பாடினர்கள்.

"இந்தப் பாரம்பரியப் போராட்டம் பாரதியில் வந்துதான் முற்றுப்பெற்றது. மக்கள் பாடலாகிய சிந்துவைக் காவிய ஆக்கத்துக்குப் பயன்படுத்தலாம் என்று காட்டியவர் பாரதியே. அவருடைய பாஞ்சாலி சபதத்திலும் கண்ணன் பாட்டிலும் உள்ள பாடல்களில் பெரும்பாலானவை சிந்துப்பாடல்களே.

"புலமைநடைஇலக்கியங்கள் குறிப்பிட்ட சில படித்தவர்களுக்குப் பயன்பட்டே வந்துள்ளன என்பதை மறுக்கமுடியாது. ஆனல் அவ்வக்காலத்திய மக்கள் பாடல்களையும் இலக்கியப் போக்குகளையும் தழுவிக் கொண்டவர்களாலேயே மொழி வளம் பெற்றது; அவர்களாலேயே மொழி இளமையும் வாழ்வும் பெற்றது."

தில்லித் தமிழ்ச் சங்கம் இந்த ஆண்டில் ஏற்பாடு செய்த இரண்டாவது சிறப்புச் சொற்பொழிவும் கட்டம் இது. திரு. எஸ். சீனிவாசன் கூட்டத்துக்குத் தலைமை வகிக்க, புலவர் திரு. ஆறுமுகம் வரவேற்புரை நிகழ்த்தினர். பேராசிரியரின் ஒன்றரை மணிநேர ஆராய்ச்சிச் சொற்பொழிவு நாட்டுவாழ்த்துடன் இனிது நிறைவுற்றது.

குறள் மரபு.
(புலவர் தி. நா. அறிவு ஒளி)

தமிழ் இலக்கியம் பற்றித் தமிழர் ஈடிணையற்ற செருக்குக் கொள்ளவேண்டும். குறைந்த வாழ்நாளைக் கொண்ட பல மொழிகளின் குறுகிய இலக்கிய வளம் பற்றியே அவ்வத் தாய்மொழியினர் தனிபெரிதும் பெருமையுறுவது காண்கிறோம். அவ்வகையில் உண்மையிலே உலகிலேயே முதிய இலக்கிய மரபினையுடைய தனித்தமிழ் வளத்துக்காகத் தமிழர் பெருமையுறுவது இயல்பான கடமையாம்.

ஆயிரமாண்டு வாழ்வையுடைய ஆங்கில இலக்கியங் குறித்து ஆங்கில அறிஞர் அடையும் செருக்கு அளவிடற் குரியதன்று இன்று உலகை ஆளும் ஆற்றல் படைத்த அம்மொழியின் தலையூற்று துவங்குவதற்கு ஈராயிரம் அன்றி, மூவாயிரம் யாண்டுகளுக்கு முன்னரே கழக இலக்கியத் தனிச் செமமரபு சார்ந்த இலக்கிய வளம் தமிழில் பூத்துக் குலுங்கலாயிற்று.

முன்னோரின் சான்ற பெருமைகளையும் ஆக்கங்களையும் நன்றியோடு போற்றி எண்ணி மகிழ்ந்து செம்மாக்கும் இனம்தான் தம் வருங்கால மரபினர் மகிழும்வண்ணம் சீரிய படைப்புகளையும் மரபுகளையும் புத்தாக்கங்களையும் விளைவிக்க முடியும்.

இம்முறையைத் தமிழர் தெளிந்து குறள் மறையைப் போற்றிக் கற்றுணர்ந்தொழுகவேண்டும். குறள் மரபு வாழும், வளரும் மரபாகும். அஃது காலத்தின் கீறலால் மாசோ மறுவோ குறைவோ உறாத பெருமைசால் மரபாகும்.

வடமொழி மறைகள், கீதை கிரேக்க அறநூல்கள், பைபிள், குரான், சப்பானிய அறச் செய்யுள், மனுமுறை, என்றிவற்றில் உள்ள குறைகள் போன்ற குறைபாடுகள் திருக்குறளில் இல்லை என்பதைத் தெளிவாக உரைக்க விழைகிறேன், மேற்கூறிய நூல்களை இழிக்கவோ, பழிக்கவோ, குறைத்து மதிப்பிடவோ வேண்டுமென்பது என் நோக்கமல்ல. திறனாய்வாளன் தான் ஆய்ந்து கண்ட உண்மையைத் தெளிவாகக் கூறுவதே அவனுக்குரிய அறம் அதன் வழியிலேயே குறள் மரபை மதிப்பிட்டுரைக்கிறேன்

சிலரைக் காக்கச் சிலரைத் தாக்கும் குறுகிய நோக்கு திருக்குறள் மரபன்று. இனக்காப்பு நூலாகவோ, சமயநோக்கு நூலாகவோ, குறுகிய கொள்கைகளை அளிக்கும் நூலாகவோ குறள் அமையவில்லை. இஃது ஒன்றே திருக்குறளின் ஒப்பற்ற உயர்தனிச் செம்மைக்கு உயிர்நிலை என்பேன்.

உலகு நோக்கி உயர் கருத்து முழக்கும் உலகப் பல்கலை இலக்கிய இலக்கண வாழ்வியல் அற உரிமை நூல் திருக்குறளாகும்.

மரபுகளுக்குள்ளே புதுமரபு சான்றது குறள்மரபு' அஃது மொழி கடந்தும், இனம் கடந்தும், நாடுகடந்தும், அரசு கடந்தும், குறுகிய

---

* 7—4—1965 புதன்கிழமை அனகாபுத்தூர் திருவள்ளுவர் விழாவில் ஆற்றிய உரைச் சுருக்கம்.

கண்ணோட்டங்கள் கடந்தும் அமைந்து பெரும் பண்பாட்டுச் சீர்மை சான்ற தனித் தமிழ்ப் பேரற மரபாகும்.

கருத்துக்கூறித் திருத்தும் நூல்களில் ஆக்கவழியில் சிறந்தமைந்த குறளின் இயல்பு வியத்தற்குரியதே. இந்நூல் வடமொழிக் கருத்துக்கு முற்றும் மாறுபட்டதென்மொழிக் கருத்திலக்கியமாகும். வாழ்வையும் உலகையும் மாந்தரையும் முன்னேக்காகவைத் தியற்றப் பட்ட செந்நூல் இந்நூல்.

புத்தசமயம், சமணசமயங்களில் உள்ள இயற்கை இகந்த மரபுகளை மீறி, அதை மறுத்துக்கிளர்ந்தெழுந்த புத்தொளிவள வாழ்வு நூல் குறள் நூல். ஆசா நெறிகளோ, வேண்டா முறைகளோ கூறி மக்களை ஏய்க்கும் மருட்டுநூலன்று குறள் அறம். மணத்லைதப் புறக்கணிக்கும் வெறிப்பும் இங்கில்லை. 'காமமே எல்லாம்' என்றும் புரட்டு நெறியும் இந்நூலில்லை

நேர்மைக் கண்ணோட்டத்தோடு கூடிய வாய்மை எண்ணங்களை வகுத்தமைத்த திருமுறை நூல் குறள் உலகம் — உலக வாழ்வு துன்பமே நிறைந்தது என்ற பொய்க்கருத்தை மறுக்கும் நம்பிக்கை நூல் திருக்குறள்.

'இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு" எனத் துன்பத்தை இன்பமாக ஆக்கிக்கொள்ளத் தூண்டும் ஆர்வ வாழ்வுக் கருத்து நூல் திருக்குறள். 'இன்னாதம்ம இவ் உலகம்
இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே'
எனப் புறநானூறு கூறும் தமிழர் வாழ்வு ஒழுக்கத்தினைத் தெளிவிக்கும் பொதுமை இலக்கியம் குறள்.

திருவள்ளுவர் போல வாழ்வின் பெரும்பான்மை நிலைகளையும் கூறுகளையும் விடாது ஆராய்ந்து இலக்கணம் வகுத்த பேரறிஞர் ஒரிருவரே இருப்பர்.

திருக்குறட்பாக்களில் சொற்கள் அமைத்த முறையாலும் நுண்ணிய பொருட்பேறுகளைப் பேராசிரியர் வள்ளுவர் மறைமுகமாகக் குறிப்பறிவுரையால்— உணர்த்துகிறார்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும் (138) என்ற குறளை ஆராய்வோம்,
நன்மையைப் பின்னர் திண்ணமாக விளைவிக்குக நல்லொழுக்கம் என முன்னதாக (முன்சீரில் வைத்து) உணர்த்துகிறார்.

நல்லொழுக்கம் திடுமென உண்டாகி நிலைபெறுது நாள்தோறும் வாழ்வில் வளர்ந்து வளர்ந்தே முதுமை வரை நீண்டு அமையக்கூடிய வாழ்க்கை அறம் அது என்பதை 'நல்லொழுக்கம்' என்ற சொல்லை மூன்றுஞ்சீரில் ஆண்டதால் தெளிவாக்கினர். அக்கருத்து மூன்று சீர்களோடு முற்றுப்பெறுகிறது.

(தொடரும்)

"வேள் எவ்வி" [நாடகம்]

ச. பாலசுந்தரம்.

காட்சி :— 10.

இடம் :- மலைக்குகை.

மாந்தர் :-வேங்கை வீரன், அருள்மொழி, வேடன்.

நிகழ்ச்சி :- ஆண்வேடத்திலுள்ள அருள்மொழி மாற்றுடையில் இருக்கிற வேங்கை வீரனின் தலைக் காயத்திற்குக் கட்டுக் கட்டுகிறாள்.

வே. வீ :- இந்த மலையிலும் இரக்கமுடைய உன்னைக் காண மிகமிக மகிழ்ச்சியடைகிறேன். நீ யார் தம்பி?

அருள் :- (சிறிது புன்சிரிப்புடன்) நான் ஒருவேடன்

வே. வீ :- வேடனா? வேடர்களின் பண்பு..........

அருள் :- பண்பு குலத்தினால் மட்டும் அமைவதல்லவே ?

வே. வீ :- இங்கு நீ தனியாகவா இருக்கிறாய் ?

அருள் :- இல்லை! என் நட்பும் சுற்றமும் இங்கே இருக்கின்றன.

வே. வீ :- இந்தப் பக்கத்தில் பசும்பூண் மகிழ்நன் இருப்பதாக ......

அருள் :- ஆம். நானும் அவருடைய ஆள்தான். நீங்கள் யார்? எங்கே செல்கின்றீர்கள் ?

வே. வீ :- நான்! .... நான்! .... யார்? நான் உன்னுடைய பகைவன். நீடூருக்குச் செல்கிறேன்.

அருள் :- (மெல்ல சிரித்து) பகைவன்! ஆம்! மனிதனுக்கு மனிதன் தான் பகை. மற்றப் புறப்பகைகளை அறிவால் வென்ற மனிதன் தன்னினத்தையே பகையாக்கிக் கொண்டு மடிகிறான்............. போகட்டும் .... நீடூரிலே சென்று ....?

வே வீ:- எவ்வியினுடைய படையிலே சேர்ந்து பணியாற்றப் போகிறேன். அதனால்தான் உன் பகைவன் என்று கூறினேன் .... தம்பி! நீ இந்த வேடர்களுடன் இருப்பதை விரும்புகிறாயா ?

அருள் :- மக்கள் அவரவர் விருப்பு, வெறுப்பின்படி நடந்துகொள்ள முடியுமா? ஆட்சியும் செல்வமும் உள்ளவர்களால் ஆட்டப் படும் பாவைகள்தாமே அவர்கள் ...... ஆமாம் ... . படையிலே சேர்ந்துபணியாற்றப் போவதாகச் சொன்னீர்களே

வே. வீ :- ஆம்.

அருள் :- படையிலே சேருவது பணியா ? படைக்கலம் என்பது செங்கோலா ? அல்லது பசிப்பிணி மருந்தா ?

வே. வீ :- நீ ஒரு வீரன் இப்படிப் பேசுகிறாய் ?

அருள் :- வீரன் என்றால் கொலையும் கொள்ளையுந்தான் புரிய வேண்டுமா ? படையும் போரும் பாரினை ஆக்குமா ? அழிக்குமா ? இப்பணிக்குத்தானே பல்லாயிரக்கணக்கான செல்வமும மக்கள் உழைப்பும் பாழாகுகின்றன !

வே. வீ :- துன்பமில்லாமல் இன்பம் விளையுமா ? காதலும் போருமே மக்கள் வாழ்வு என்று சொன்ன நம் முன்னோர்கள் அறிவிலிகளா ?

அருள் .- அறிவுக்கும், வீரத்துக்கும் தொடர்பிருக்கலாம். ஆனால் போருக்கில்லை.

வே. வீ :- நீ சொல்வது வியப்பாக இருக்கிறதே !

அருள் '- ஒன்றிலே பழகியவர்களுக்கு மற்றொன்று வியப்பாக இருக்கலாம. வெறுப்பாகவும் இருக்கலாம. மக்கள் உணர்ச்சி வயப்படும்போது அறிவை இழந்து விடுகிர்கள் என்பது.....

வே. வீ .- ஆம். உண்மைதான். ஆனால், போரைப்பற்றி..............

அருள் :- விலங்காக வாழ்ந்த மனிதன் பிற விலங்குகளினின்றும் தன்னைக் காத்துக் கொளளவும், தன் உணவைப் பெறவும் போரிட்டான். அறிவு வளாந்தது. அதனால், அவைகளை வென்றான். ஆயினும் புலனுணர்ச்சிக்கு அடிமையான மனிதன் போரிட்டு வெல்லுதலை மகிழ்ச்சியாக எண்ணினான் பழைய விலங்குணர்ச்சியும. வெற்றிக் களிப்பும் அவனை விடவில்லை. தன் இனத்தையே கொன்று மகிழ்ந்தான். நாகரிகம் வளர வளர உயிரைக் கொல்லாமல் மற்போரிட்டாவது மகிழ்ச்சி அடைந்தான். அவை வழக்கமாயின

வே. வீ .- "படை, குடி. கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு" என்று படையை அரசுக்கு உறுப்பாகக் கூறுகின்றார்களே ?

அருள் :- ஆம். கள்ளுக்கு மயக்கந்தான் முக்கியமான உறுப்பு. ஆனால், கள்ளே தீமையென வரும்பொழுது .... அரசும் அப்படியே. அரசன் தன்னைக் காத்துக்கொள்வதற்காகப் படை திரட்டுகிறான். அதுவே மிகுமானால் பிற நாட்டை அடிமைப் படுத்த விழைகிறான். அவன் ஒருவன் விழைவிற்காகக் கோடிக் கணககான மக்கள் உழைத்து மடிகிறார்கள் பிறர் உழைப்பிலே வாழ்ந்து அவர்களுக்கே கூற்றுவனாகும் ஒரு கூட்டம் இருக்கின்றதென்றால் அது படைதான்.

வே. வீ:- அப்படி என்ருல் நம் முன்ஞேர்கள் மடையர்களா? ஆண்மையும் வீரமும் போர்புரியத்தானே அமைந்துள்ளன.

அருள்:- தீயின் பயன் வீட்டைச் சுடுவதா? ஆண்மையும், வீரமும் அஞ்சாமைப் பொருட்டு அமைந்த குணங்கள் அறியாமையால் வரும் புறப்பகையையும் அவாவிஞல் வரும் அகப்பகையையும் அகற்றுவதுதான் ஆண்மை. பிறன் மனே நோக்காமையைப் பேராண்மை என்றும் கூறுவர் தென்னேயை வளர்ப்பது கள்ளுக்காகவா?

வே. வீ:- ஒரு பக்கம் படை வலிமை உள்ளபோது மறுபக்கமும் அதைத் திரட்டித்தானே ஆகவேண்டும்.

அருள்:- ஆம். கல்வி செல்வம் புகழ் வலிமை இவை ஒருபக்கத்தே குவியுமாஞல் ஒன்றைக் காட்டிலும் ஒன்று மன்பதையைப் பாழ் படுத்தும். படையை மிஞ்சவிடுவதும் மோதவிடுவதுந்தான் தவறு. போரின் தீமை அறிந்தும் அறிஞர்கள் அதனே மறைக்கிருர்கள். மறுக்கிருர்கள்.

வே. வீ:- தம்பீ! இந்த அமைப்பு உள்ளவரையிலும் அதற்குட்பட்டுத் தானே நடக்கவேண்டும்.

அருள்:- அமைப்பு என்ருல் அது மாற்றப்படுவது என்று தெரியவில்லையா?

வே. வீ:- தம்பீ! "நீ மிக்க நல்லறிவு படைத்தவன் ...

[அப்பொழுது ஒரு வேடன் வந்து வெளியிலிருந்து கொண்டே "அம்மா ...அம்மா" ... என்று கூப்பிடுகிருன்; அருள்மொழி உடனே வேங்கை வீரனே மறைந்திருக்கச் செய்து அவள் மட்டும் வெளியில் வருகிருள்]

வேடன்:- அம்மா! இந்தப் பக்கம் எவ்வியினுடைய ஆட்கள் நடமாடுகிருர்கள். சற்று முன்பு ஒருவனே அடித்து வீழ்த்தினேன். அவன் பிணத்தைக் காணவில்லே. இதோ அவனுடைய வாள்!

[வேடன் வேங்கை வீரனின் உடைவாளேக் காட்டுகிருன் அருள்மொழி வாளேப் பெற்று, அதன் தலேப்பிலே உள்ள பெயரைப் பார்த்துவிட்டு வைத்துக்கொள்கிருள் ...வேடன் தொடர்ந்து பேசுகிருன் ...]

நீ சற்று விழிப்பாக இருக்கவேண்டும். வருகிறேன்.

[வேடன் போகிருன். அருள்மொழி உள்ளே வருகிருள். மறைவிடத்திருந்த வேங்கை வீரன் வெளியில் வருகிருன்.]

வே. வீ:- யாரது? அம்மா அம்மாவென்று பேசிஞனே யாரிடம்?
[அருள்மொழி தன்னேச் சமாளித்துக்கொண்டு]

அருள்:- என்னிடந்தான் ... என் பெயர் அம்மான்!
[உள்ளுக்குள் சிரித்துக்கொள்கிருள்]

வே. வீ:- ஓ! அம்மான்! நீ செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன். நான் இங்கிருந்தால் என்னையும் எவ்வியினுடைய ஆளென்று கருதி

அருள்:- எவ்வியினுடைய ஆளாயினும் சரி, அவன் படைத் தலைவனு யினும் சரி, என் பாதுகாப்பில் இருப்பவர்க்கு ஒருவரும் துன்பிழைக்க முடியாது

வே. வீ:- தம்பீ! இல்லை .. இல்லை அம்மான்! நானே நானே உனக்குப் பகைவனாகி வந்தால்

அருள்:- அப்பொழுது பார்ப்போம் ...

வே வீ:- புலர்வதன் முன்னர் நான் இங்கிருந்து போவதுதான் நலம்.

அருள் :- உங்கள் விருப்பம். ஆனால் துணையின்றி ...

வே. வீ:- வீரனுக்கு வாள்தான் துணை ...

[எனக் கூறிக்கொண்டே தன் இடையைத் தடவுகிறான். வாளினைக் காணாமல் திடுக்கிட்டு,

ஆ! என் வாள் எங்கே?

அருள்:- கவலை வேண்டாம். நான் ஒரு வாள் தருகிறேன். பெற்றுச் செல்லுங்கள் ...

[அருள்மொழி வாளைக் கொடுக்கிறான். வாளைக் கண்டு வேங்கை வீரன் வியந்து, வியப்புத் தெரியாதவாறு மறைத்துப் பெற்றுக்கொள்ளுகிறான்.]

வே. வீ:- தம்பீ! நீதான் மனிதன். தமிழர் பண்பென்பதை உன்னிடம் காண்கிறேன் உன்னை என்றைக்கும் மறவேன். என் நினைவாக இதனைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

[விரற் செறி (மோதிரம்) யைத் தருகிறான். அருள்மொழி அதனை வாங்கிக்கொள்கிறான். இருவரும் வணக்கங் கூறிக்கொண்டு பிரிகிறார்கள்]

காட்சி :- 11

இடம்:- அரண்மனையின் ஓரிடம்
மாந்தர் :- எவ்வி, வேங்கை வீரன்.

நிகழ்ச்சி :- எவ்வி அங்கும் இங்குமாக உலவுகிறான் அதுபோது படைத்தலைவன் வேங்கை வீரன் அங்கு வந்து வணங்கி நிற்கிறான்

வே. வீ:- அரசே! வணக்கம்,

எவ்வி:- வருக.

வே வீ. மகிழ்நன் மறைந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டேன். புலியைக் கூண்டிலே அடைக்கவேண்டியதுதான் எச்சம்.

எவ்வி:- தக்க வீரர்களைக்கொண்டு அவர்களைச் சிறைப்படுத்தி வசரும்

வே. வீ:- ஆணை.

[வேங்கை வீரன் செல்கிருன்]

காட்சி:— 12

இடம்:- தெரு.

மாந்தர்:- பாணன், வழிப்போக்கன்

நிகழ்ச்சி:- பாணன் இசைத்துக்கொண்டு செல்கிருன். இசை முடிந்ததும் எதிரே ஒரு வழிப்போக்கன் வருகிருன்.

வழி:- பாணரே! ஏது? இன்னிசை யமுது பொங்கி வழிகிறதே!

பாண:- மன்னன் தந்த பரிசு. பொன்னும் மணியும் தந்தான். பொங்கி வழிகிறது இசை.

வழி:- கலைக்குச் செல்வந்தான் மூலம் போலும். இன்றைக்கு என்ன அரண்மனையில் சிறப்பு?

பாண:- நீர் இந்த ஊருக்குப் புதியவரோ? மகிழ்நனைச் சிறைப் பிடித்துவிட்டார்கள்.

வழி:- அப்படியா! இனி நாடு அமைதியாயிருக்கும்

பாண:- பல்லவிக்குப் பின்னர் அநுபல்லவி,

வழி:- அப்படியென்ருல் .. ?

பாண:- மத்திமத்திற்குப் பின் உச்சம் விளங்கவில்லையா? அமைதிக்குப் பின் குழப்பமும் உண்டு என்பார்கள்.

வழி:- இனிக் குழப்பத்திற்கு என்ன இருக்கிறது?

பாண:- எனக்கென்ன தெரியும்? இயற்கையைக் கூறினேன்.

[வழிப்போக்கன் போகிருன், பாணன் இசைத்துக்கொண்டே செல்கிருன்.]

காட்சி:— 13

இடம்:- காடு

மாந்தர்:- அருள்மொழி, வேடன்

நிகழ்ச்சி:- அருள்மொழி தனிமையில் இருந்து தன் தந்தை மகிழ்நனை எண்ணி வருந்துகிருள்.

அருள்:- அப்பா! உங்களைப் பிரிந்து எவ்வாறு இருப்பேன் ... ... வஞ்சித்துவிட்டார்கள் நெஞ்சமில்லாதவர்கள். தாயற்ற என்னைத் தந்தையுமற்றவளாகச் செய்துவிட்டார்களே பாவிகள்

[அப்பொழுது வேடன் வருகிருன்]

வேடன்:- அம்மா! கவலைவேண்டாம். எஞ்சியிருக்கும் வேடர்களைக் கொண்டு எவ்வியின் நெஞ்சைப் பிளந்து நம் தலைவரை மீட்டு வருவேன்.

அருள்:- அண்ணா! எஞ்சியிருப்பவர்களையும் இழக்க மனம் வரவில்லை எனக்கு... என் தந்தையை மீட்பது என் கடன்.

வேடன்:- அம்மா! நீயா? எவ்விடத்தில் இரக்கத்தை எதிர் பார்க்கிறாயா?

அருள்:— இல்லை. வஞ்சத்துக்கு வஞ்சம். சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி.

வேடன்:- அம்மா! கோளரிபோல் கூடியிருக்கும் மறவர் கூட்டத்தில் நீ எவ்வாறு செல்வாய்? அதிலும் நீ ஒரு பெண்.

அருள்:- பெண்! பெண்ணென்றால் வீரமிருக்காதா? பெற்றமகனைப் போர்க்களத்திலே கண்டு மகிழ்ந்தவள் பெண்! முதல் நாள் போரிலே அண்ணனும் கணவனும் இறக்க, பின்னாட் போருக்குத் தன் ஒரே மகனை அனுப்பியவள் பெண்! பாலுண்ட குழவிக்கு வேல்கொடுத்து வெஞ்சமருக்கு அனுப்பியவள் பெண் அவர்கள் பிறந்த மண்ணிலேதான் நானும் பிறந்தேன், தந்தையொடு மீள்வேன், இன்றேல் அங்கு மாள்வேன்

[விரைந்து செல்கிறாள் அருள்மொழி. வேடன் அவள் போவதைப் பார்த்துக்கொண்டே நிற்கிறான்]

வேடன் :- ஆ! அறிவின் கருவூலம் அருள்மொழி! அவள் இறக்க நேர்ந்தால் ... ... ஐயோ! ... நானும் பின்பற்றிச் செல்லுகிறேன்.

[வேடன் விரைந்து அருள்மொழியைப் பின்பற்றிச் செல்கிறான்].

காட்சி:- 14

இடம்.- சிறை

மாந்தர்:- மகிழ்நன், சிறைக்காவலர், அருள்மொழி, வேங்கைவீரன்

நிகழ்ச்சி:- மகிழ்நன் கைதியாகிச் சிறைக்குள் இருக்கிறான்.

[காவலர் இருவர் வெளியில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர். அவர்களில் ஒருவன் செவிடன்]

காவ 1:- ஊரெல்லாம் இதே பேச்சாக இருக்குதண்ணே.

காவ 2:- ஊறுகாயா? நான் தொடுவதே இல்லை.

காவ 1:- (உரத்த குரலில்) நம்ம ஊரில்லெ ஊர் ...

காவ 2:- ஓ ஊருக்குப்போயிருந்த என் வீட்டுக்காரிதானே நல்லபடியாக வந்து சேர்ந்தாள்.

காவ 1:- (தனக்குள்ளே, வேறுபக்கந் திரும்பிக்கொண்டு) அங்கேயே சாவாமல் உன்னிடம் வந்தாளே சாவ ...

[மீண்டும் செவிடனிடம் சற்று உரத்த குரலில் ...]

நம்ம ஊரு ...

காவ 2:- உன் வீட்டுக்காரியும் ஊருக்குப் போயி ..

காவ 1:- உன் இழவுக்குப் பேராயி ...

[தன் தலையில் அடித்துக்கொள்கிறான்]

காவ 2:- என்ன தம்பி சொல்றே? கொஞ்சம் உறைக்கச் சொல்லு காது கொஞ்சம் மந்தம்.

காவ 1:- (உறைப்பாக) மகிழ்நன் ... மகிழ்நன் ...

காவ 2:- மகிழ்நனா ... ஆமாம். சிறையில் இருக்கான். அதுக்காகத்தானே நாம் காவல் இருக்கிறோம்.

காவ 1:- அப்பாடா ... சிறையிலே போட்டிருந்தாங்களே ...

காவ 2:- சிறையிலே ... போய்ட்டானா? தப்பியா போயிட்டான்.

[உடனே செவிடன் வாளை எடுத்துக்கொண்டு ஓடமுயலுகிறான் சிறைக்காவலன் முதல்வன். "இல்லை இல்லை ... என்று தடுத்து நிறுத்துகின்றான். அப்பொழுது அருள்மொழி காவலன் உடையில் அங்கு தோன்றுகிறாள்.]

அருள:- அடடா! நன்றாக இருக்கே உங்கள் காவல்.

காவ:- 1 இல்லை. விளையாட்டாக ...

அருள்:- விளையாடவா வந்தீர்கள் ? நம் படைத்தலைவர் உடனே உன்னை ஊருக்கு வெளியேயுள்ள ஆய்வுக் கூடத்திற்கு வரச் சொன்னார். இதோ அடையாளம்.

[வேங்கை வீரன் முன்னர்க் கொடுத்த மோதிரத்தைக் காட்டுகிறாள்]

திறவுகோல் எங்கே?

[சிறைக்காவலன் முதலாமவன் திறவுகோலை அருள்மொழியிடம் கொடுத்துவிட்டுப்போகிறான். அவன் போன பின்னர், அருள்மொழி விக்கல் எடுப்பதுபோல் நடிக்கிறாள்].

காவ 2;- ஐயோ! ஐயோ!! தண்ணீர் வேண்டுமா? இரு. இதோ வந்துவிடுகிறேன்.

[சிறைக்காவலன் இரண்டாமவன் தண்ணீர் கொண்டுவர வெளியே ஓடுகிறான். உடனே அருள்மொழி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, மகிழ்நன் அடைபட்டிருந்த சிறைக் கதவைத் திறக்க முயல்கிறாள் அப்பொழுது திடீரென்று அங்கே வேங்கை வீரன் வந்துவிடுகிறான். ஆத்திரங் கொள்கின்றான்.]

வே. வீ:- என்ன செய்கிறாய்? நிறுத்து !

[அருள்மொழி திடுக்கிடுகின்றாள். பின்னர் தன்னைச் சமாளித்துக்கொள்கிறாள். வேங்கை வீரன் ஆத்திரத்தோடு அவளருகில் வந்து நின்று பார்க்கிறான்]

நீயா? இந்தக் கள்ளச் செயல் புரிகிறாய்?

[அருள்மொழியிடம் இருந்த திறவுகோலை பிடுங்கிக் கொள்கின்றான்.]

அருள்:- சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி !

வே. வீ:- இதோ ! ... (தன் உடைவாளை உருவி) இந்த வாளுக்கு விடைதந்த பின்னர்தான் நீ மகிழ்நனை மீட்க முடியும். எடு வாளை! என் பிணத்தின்மீது உன் தலைவனை அழைத்துச் செல் !

அருள்:- (தன் உடைவாளை உருவி) எனக்கும் கடமை உணர்ச்சி இருக்கிறது.

[வேங்கை வீரனின் வாளும் அருள்மொழியின் வாளும ஒன்றோடொன்று மோதுகின்றன. அப்பொழுது மகிழ்நன் சிறைக் கம்பிகளை வளைத்துக்கொண்டு வெளியே வருவதற்கு முயல்கின்றான். வேங்கை வீரனின் வாள்வீச்சால் அருள்மொழியின் வாள் மண்ணிலே விழுகின்றது. கீழே விழுந்த வாளை எடுக்க அருள்மொழி முற்படும்போது வேங்கை வீரன் தன் காலாலே வாளை மிதித்துக்கொள்கிறான். கீழே குனிந்த அருள்மொழியின் தலைப்பாகை கீழே விழுகிறது. அப்பொழுதுதான் வேங்கை வீரன் வியப்புமேலிட்டு

வே. வீ:- ஹா! ... நீ ... நீ பெண்ணா ?

[வேங்கை வீரன் வியந்தபடி நிற்கின்றான். இந்நிலையில், சிறைக்கம்பிகளை வளைத்துவிட்டு வெளியில்வந்த மகிழ்நன் வேங்கை வீரனைத் தாக்குகின்றான். எதிர்பாராத தாக்குதலினால் வேங்கை வீரன் மூர்ச்சையாகிக் கீழே விழுகிறான்]

அருள்:- அப்பா ! என்ன காரியம் செய்தீர்கள்?

மகிழ்:- படைமுகத்தில் ஒப்பாரியா? வாம்மா!

[என்று கூறிக்கொண்டே அருள்மொழியை இழுத்துக் கொண்டு வெளியே ஓடுகிறான்.] அப்பொழுது செவிட்டுச் சிறைக்காவலன் தண்ணீர் கொண்டுவந்து கீழே விழுந்து கிடக்கும் வேங்கை வீரனிடம்]

காவ 2:- ஐயோ! என்ன தம்பி அதற்குள்ளே மயங்கி விழுந்து விட்டாய்? இந்தா தண்ணீர் !

[தண்ணீரை வேங்கை வீரன் முகத்தருகே கொண்டுபோனவன் அவன் முகத்தைப் பார்த்ததும் 'ஹா'! என அலறுகிறான்.]